உ

கடவுள்துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உரு] பிரபவ-ஹூ ஐப்பசிமீ [பகுதி—கஉ.
Vol. XXV. October-November-1927. No. 12.

## பிரகிருதிசாஸ்த்ரம்.

## (PHYSICAL SCIENCE)

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்
ஸ்ரீமாந் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A., எழுதியது)

[௬உஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

### பௌதிகம்.

### (PHYSICS.)

### II. உஷ்ணம் (HEAT.)

உஷ்ணத்தின்விஷயத்தை ஐந்து இயல்களாக வகுக்கலாம். அவை, முறையே அளவுப்பெருக்கம் (Expansion or Thermometry), உஷ்ண இராசி (Calorimetry), ஸ்திதி மாற்றம் (Change of State), உஷ்ணப்பிரவிருத்தி (Heat Propagation), உஷ்ண இயந்திரம் (Thermodynamics) என வழங்கப்பெறும். அளவுப்பெருக்க இயலில் வஸ்துக்களை உஷ்ணப் படுத்தலால் ஏற்படும் பரிமாண மாறுபாடுகளும், இம்மாறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டு இயற்றப்பட்டுள்ள உஷ்ணநிலை (Temperature) யளக்கும் கருவிகளான தெருமாமீட்டர்களின் (thermometers) வரலாறும் கூறப்படும். உஷ்ண இராசிகளை (Quantities of heat) இராசிமானி (Calorimeter) யால் அளக்கும் வண்ணமும், பற்பல பொருள்கள் உஷ்ணத்தை ஏற்கும் திறமும் இராசி

இயலின்கண் அமையும். பொருள்கள் கடினம், திரவம், வாயு எனப்படும் ஸ்திதிகளில் யாதானுமொருஸ்திதியிலிருந்து வேறொன்றுக்கு மாறுங்கால் ஏற்படும் உஷ்ணநிகழ்ச்சிகள் ஸ்திதிமாற்ற இயலில் அடங்கும். உஷ்ணப்பிரவிருத்தியியலில் உஷ்ணம் இடத்துக்கிடம் சஞ்சரிக்கும் வகைகள் ஆராயப்பெறும். உஷ்ணத்தின் உதவிபெற்று வேலைசெய்யும் இயந்திரங்களின் (Heat Engines) ஆராய்ச்சியாற்கிடைக்கின்ற உஷ்ணத்திற்கும் வேலைக்குமுள்ள இயைபுகள் உஷ்ண இயந்திர இயலின்கண் அமைவனவாகும். இனி, இவ் வைந்து இயல்களையும் தனித்தனியே விரித்துக் கூறுவோம்.

## அளவுப்பெருக்கம் (EXPANSION OR THERMOMETRY)

பொருள்களை உஷ்ணப்படுத்தலால் ஏற்படும் மாறுபாடுகள் பலவுள. அவற்றுள் அளவுப்பெருக்கம் ஒன்றாகும். இது சாமான்யமாக கடினம், நீர், வாயுப்பொருள்கள் மூன்றிற்கும் பொதுவாக வுள்ளது. கடினப்பொருள்களில் அளவுப்பெருக்கம் மூன்று விதம். அவை நீட்சி, விரிதல், பருத்தல் என்பனவாகும். ஒரு மீட்டர்நீளமுள்ளதோர் இருப்புக்கழியை நன்றாகக் கொதித்துக்கொண்டிருக்கும் தண்ணீரினுட் போட்டுவைத்தால் அதன் நீளம் சுமார் ஒரு மில்லி மீட்டர் அதிகப்படும். அல்லது இரும்பாலாகிய ஒரு கெஜக்கோலை அவ்வண்ணம் செய்தால் அதிலேற்படும் நீட்சி, ஒரு அங்குலத்தின் இருபத்தைந்திலொருபகுதியேயாகும். எனவே, இந்நீட்சியை நுட்பமான கருவிகளைக்கொண்டே அளக்கவேண்டும். நீட்சிக்கு மற்றொருதாரணமும் பொருந்தும். கொல்லர்கள் வண்டிச் சக்கரத்திற்கு இருப்புவட்டையை இணைக்கும்செயலைச் சற்றுக்கவனிப்போம். மரத்தாலாகிய சக்கரத்தைத் தரையிற் படுக்கவைத்துக்கொள்ளுகிறார்கள். மரச்சக்கரத்தின் சுற்றளவுக்குச் சிறிது குறைந்த சுற்றளவுள்ள இருப்புவட்டையைத் தரையிற் கிடத்தி அதைப் பழுக்கக் காய்ச்சுகிறார்கள். இவ்விதம் காய்ச்சுவதனால் வட்டையின்சுற்றளவு சக்கரத்தின் சுற்றளவைவிடச் சற்று அதிகமாகிவிடுகிறது. இந்தக் காய்ந்த வட்டையைக் குறடுகளால் தூக்கிச் சக்கரத்தோடு சேர்க்கவும், சக்கரம் வட்டைக்குள்ளே நிற்கின்றது. இவ்விதம்வட்டையைத் திருத்தமாக நிறுத்தியபின்னர் அதன்மேற் குளிர்ந்த தண்ணீரை வார்க்கிறார்கள், வட்டையின்சூடு நீங்கவும் அதன் சுற்

றளவு குறைந்துபோவதால், அது மரச்சக்காத்தை உறுதியாகக் கௌவிக்கொள்ளுகிறது. விரிதல் என்னும் நிகழ்ச்சி தகடுகளில் ஏற்படும். ஒருசதுரமீட்டர் பரப்புள்ளதோர் இருப்புத்தகட்டைக் கொதிக்கும் தண்ணீரில் இட்டுவைத்தால் அதன்பரப்பு சுமார் இரண்டு சதுர மில்லிமீட்டர் அதிகமாகும். பருத்தல் கடினம் நீர் வாயுப்பொருள்கள் மூன்றிற்கும் பொதுவானது. பருத்தலாவது முகத்தலுக்கு விஷயமாகும் கனத்தின் (Volume) பெருக்கம் எனலாம். ஒரு கனமீட்டர் (One cubic metre) பரிமாணமுள்ள இரும்புத்துண்டைக் கொதிக்கும் தண்ணீரிலிட்டுவைத்தால் அதன்கனம் சுமார் மூன்று கனமில்லிமீட்டர் அதிகமாகும். ஸ்நானம் செய்வதற்கு வெந்நீர்போடுவதில் ஒரு நிகழ்ச்சியைக் காணலாம். அடுப்பின்மேலுள்ள பாண்டத்திற் குளிர்ந்த நீர் வைக்கப்பட்டிருக்கிறது. தண்ணீரின்மட்டம் பாத்திரத்தின் விளிம்புக்குச் சுமார் அரைக்கால் அங்குலத்திற்குக் கீழே நிற்பதாக வைத்துக்கொள்வோம். ஒரு கூர்மையான ஆணியால் தண்ணீர்மட்டத்திற்குச் சரியாக ஒரு கோடு வரைந்துகொள்க. பிறகு தீமைமூட்டித் தண்ணீரைக் காய்ச்சுக. காய்ச்சவே, தண்ணீரின்மட்டம் சிறிது சிறிதாகப் பாத்திரத்தின் விளிம்பைநோக்கி நெருங்குகின்றது. நீரானது ஓரளவு உஷ்ணநிலைக்கு வரவும் பாத்திரத்தில் நிரம்பி வழிய ஆரம்பிக்கும். ஆதலின், உஷ்ணப்படுத்தலால் தண்ணீரின் அளவு பருக்கின்றது எனலாம். பருத்தல், நீர்ப்பொருள்களுக்கேயன்றி வாயுப்பொருள்களுக்குமுண்டு என்பதைப் பரிசோதித்தறியலாம். காற்பந்தின (Foot-ball) அமைப்பு யாவருக்கும் தெரியும். ஒரு உருண்டையான தோற்கவசத்திற்குள் ஒரு மெல்லிய ரப்பராலியற்றிய காற்றுப்பை (Rubber bladder) வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காற்றுப்பையைத் தனியேஎடுத்துக்கொள்க. அதில் ஒரு துருத்தியைக்கொண்டு (Inflator) காற்றை நிரப்புக. காற்று நிரம்பவும் பையானது உருண்டைவடிவம் பெற்று ரப்பர்ப்பந்தாகும். பையின்வாயைக் காற்று வெளியேறாவண்ணம் கயிற்றாற் கட்டிவிடுக. பிறகு இந்த ரப்பர்ப்பந்தை ஒரு பாண்டத்திலுள்ள தண்ணீரிலிட்டால், அது மிதக்குமல்லவா? ஆனால் அப்பந்துடன் ஒரு பளுவான இரும்புக்குண்டைக் கட்டி இரண்டையும் தண்ணீரில் இட்டால், பந்தானது குண்டோடு தண்ணீரினுள் அமிழ்ந்து நிற்கும். அவ்வண்ணமே செய்துகொண்டு, தண்ணீரைச் சிறிது

சிறிதாக உஷ்ணப்படுத்தினல், பந்துக்குள்ளே யிருக்கும் காற்றும் வர வர உஷ்ணமாகின்றது. ஆகவே காற்றுப் பருக்கின்றது. பந்தானது முழுதும் அடைக்கப்பட்டிருப்பதால், காற்று வெளியேறுவதற்கு வழியில்லை. ஆகவே, காற்ருனது பந்தின் எல்லைச்சுவற்றை மேன் மேலும் அழுத்த ஆரம்பிக்கின்றது. ரப்பர்ச் சுவரும் அழுத்தத்திற் கேற்றவாறு இணங்கி விரிகின்றது. இவ்விதம் விரியவும், பந்தின் பரிமாணமும், சூடு ஏற ஏற அதிகரிக்கின்றது. சூடு ஏறஏறப் பந்து பருத்துச் செல்வதனல், அதன் உள்ளே யிருக்கும் காற்றுப் பருக்கின்றது எனத் தெரிந்துகொள்ளலாம். இவ்விஷயத்தில் ஒரு சந்தேகம் ஏற்படக்கூடும். அது, 'பந்து பருக்கின்றது உண்மையே; ஆனல், பந்தின்சுவராகிய கடினப்பொருள் (ரப்பர்) உஷ்ணத்தினல் பருப்பதுபற்றியே இந் நிகழ்ச்சி யேற்படாதோ?' என்பதாம். இது உண்மையே. ஆனல் ஏற்கனவே கூறியபடி, கடினப்பொருள்களின் அளவுப்பெருக்கம் மிகவும் நுண்ணியதாயிருக்கும். ஆகவே, பந்தின்சுவராகிய ரப்பர்த்தகட்டின் பெருக்கத்தினல்மட்டும் விளைகின்ற அளவுப்பெருக்கம் மிகவும் நுண்ணியதாகவே இருக்கும்; இப்பெருக்கம் நுட்பமான உதவிக் கருவியின்றிக் கண்ணுக்குப் புலப்படாது. பந்தில் ஏற்பட்டிருக்கும் அளவுப் பெருக்கம் மிகவும் அதிகமாயிருத்தலின், இந்தப் பெருக்கத்திற் பெரும்பான்மை காற்றினுடையதாகவும், ஒரு சிறுபான்மை ரப்பர்த்தகட்டினுடையதாகவுமே கொள்ளவேண்டும்.

இத்தகைய பரிசோதனைகளால், நமக்கு ஒரு முக்கியமான முடிவு கிடைக்கின்றது. இந்த அருமையான முடிவு யாதெனின், ஒரு வஸ்துவின் உஷ்ணநிலை (temperature) அதிகரித்தற்கேற்றவாறு அதன் பரிமாணமும் அதிகரிக்கின்றது என்பதே. எனவே, ஒரு வஸ்துவின் பரிமாண மாறுபாட்டைக்கொண்டு உஷ்ணநிலையை அளவிடலாம். இவ்விஷயம் ஒரு உதாரணத்தால் விளங்கும். ஒரு கம்பியின் நீளம் ஒரு மீட்டர். அதை ஓர் பாண்டத்திலுள்ள வெந்நீரில்வைக்கவே, அதன் நீளம் அரை மில்லிமீட்டர் அதிகப்படுவதாகக் கொள்வோம். இதே ஒருமீட்டர்நீளமுள்ளகம்பியை மற்ருெருபாண்டத்திலுள்ள சூடான எண்ணெயில் இட்டுவைத்தால், இதே நீட்சி, அதாவது அரை மில்லிமீட்டர் அளவுப் பெருக்கம் ஏற்படுவதாகவுங் கொள்வோம். ஏற்பட்ட

நீட்சிகள் ஒன்றேயாகலின், தண்ணீரும் எண்ணெயும் ஓரே உஷ்ண நிலையி லுள்ளன என்பது கொள்ளப்படும். ஆகவே, இந்தக் கம்பி உஷ்ணநிலை அளக்கும் கருவியாகின்றது. இக்கருவிக்கு உஷ்ணநிலைமானி எனும் பெயர் தகும். இதனை ஆங்கிலத்தில் தெருமாமீட்டர் (Thermometer) என வழங்குவார்கள். உஷ்ணநிலையளப்பதற்கு ஏதுவாகிய அளவுப் பெருக்கத் தன்மை, கடினம் நீர் வாயுப் பொருள்கள் மூன்றிற்கும் ஒருங்கே அமைவதாகலான், இம்மூவகைப் பொருள்களாலும் தெருமா மீட்டர்கள் இயற்றலாம். கம்பி, தகடுகளைக்கொண்டும், தண்ணீர், திரா வகம், தைலம், பாதரசம் முதலிய நீர்ப்பொருள்களைக்கொண்டும், காற்று முதலிய வாயுப்பொருள்களைக்கொண்டும் தெருமாமீட்டர்கள் இயற்றப்பட்டுள்ளன. கடினப்பொருளாலியற்றப்பட்ட தெருமாமீட்டர் களைக்காட்டிலும் திரவப்பொருளால் (Fluids) இயற்றப்பெற்றவைகளே அதிக நுட்பம்பொருந்தியவையாகும். திரவப்பொருள்களாலியற்றப் படுவனவற்றுள், நீர்ப்பொருட்கருவிகளைவிட வாயுப்பொருட்கருவிகளே அதிக நுட்பமானவை. வாயுப் பொருள்களுள் அரியதான ஹீலியம் (Helium) என்னும் பொருளான் அமைக்கப்பெற்ற தெருமாமீட்டரே எல்லாவற்றினும் சிறந்தது. இச் சிறந்தகருவியை விளக்கிக்கூறுதல் அறிவுக்குப் பெரியவிருந்தேயெனினும், இவ்வியாசத்தொடரின் குறுகிய நோக்கத்துக்கு உட்படுத்துதல் இயலாமையான் இதனை விரிக்காது விடுவோம். சாதாரண மக்கள்வழக்கினும், ஆரம்ப ஆராய்ச்சிவழக்கி னும் பெருபான்மையாக உபயோகப்பட்டுவரும் பாதரசத் தெருமாமீட் டர் ஒன்றையே ஆராய்வோம்.

### பாதரசத் தெருமாமீட்டர்கள் (MERCURY THERMOMETERS.)

தெருமாமீட்டர் கண்ணாடியாற் செய்யப்பட்டுள்ளது. அதன் உடலின் பாகங்கள், குண்டு தண்டு என இரண்டாகும். குண்டானது மெல்லிய கண்ணாடியால் ஒரு சிறு குப்பிபோல் அமைக்கப்பட்டு, அக் குப்பியின்வாயானது குறுகி, ஒரு கண்ணாடித்தண்டினூடே செல்லும் ஒருநீர்மையான (Uniform) மயிரிழைத்துவாரமாக (Capillary tube) நீண்டுசெல்லுகின்றது. இம்மயிரிழைத்துவாரத்தின் ஓர் இறுதி குப்பி யின் இடைவெளியுடன் கலந்தும், மற்றொரு இறுதி அடைக்கப்பட்டும் உள்ளது. குப்பி அல்லது குண்டு நிறையவும், தண்டிலுள்ள மயிர்க்

குழையிற் சிறிதளவும் பாதரசத்தால் நிரப்பப்பட்டிருக்கிறது. மயி ரிழைத்துவாரத்தில், பாதரசமட்டத்திற்கு மேலேயுள்ள இடைவெளி யானது ஒருசிறிது பாதரச ஆவிதவிர வேறு யாதொருவிதமான வாயு வும் சிறிதுமில்லாத வெற்றுவெளியேயாம். இந்தக் கருவியின்குண்டை, உருகும்பதத்திலுள்ள பனிக்கட்டிச்சீவல்களுக்கு (Ice shavings) இடையே செருகி, கருவியை நெட்டுக்குத்தாக நிறுத்தினால் பாதரசத் தின்மட்டம் (அதாவது மயிரிழைத்துவாரத்தில் நிற்கும் இரசக்கம்பி யின் நுனியானது) தண்டின் கீழ்ப்பாகத்தில் வரையப்பட்டதோர் கோட் டுக்கு நேராக நிற்கும். இரசமட்டம் இந்தக்கோட்டுக்கு நேராக நிற்குங் கால், அதன் உஷ்ணநிலை உருகும்பதத்திலுள்ள பனிக்கட்டியின் உஷ்ண நிலையேயாகும். இந்தக் கீழ்க்கோட்டினால் உணர்த்தப்படும் உஷ்ணநிலை யைத் தாழ்ந்த ஸ்திரநிலை (Lower fixed point) அல்லது தண்ணீர் உறையும் எல்லை (Freezing point of water) எனல் தகும். இனி மிகவும் சுத்தமான தண்ணீர் மலமலவென்று பொங்கிக் கொதித்துக் கொண்டிருக்கும்பொழுது தெருமாமீட்டரை அதில் நெட்டுக்குத்தாக வைத்தால், பாதரசமட்டம் (பாதரசத்தின் பரிமாணம் அதிகரித்தலால்) மயிரிழைத்துவாரத்தினூடே வளர்ந்தோங்கித் தண்டின் மேற்பாகத்தி லுள்ள மற்றொருகோட்டுக்கு நேரே வந்துநிற்கும். பாதரசமட்டம் இந் தக்கோட்டுக்கு நேராக நிற்குங்கால் அதன் உஷ்ணநிலை தண்ணீர் கொதிக்குங்காலுள்ள உஷ்ணநிலையேயாகும். இந்த மேற்கோட்டினால் உணர்த்தப்படும் உஷ்ண நிலையை உயர்ந்த ஸ்திரநிலை (Upper fixed point) அல்லது தண்ணீர் பொங்கும் எல்லை (Boiling point) எனலாம்.

இவ்விதமாகத் தண்டின்மேல் வரையப்பட்டுள்ள இரண்டு கோடு களுக்குமிடையேயுள்ள நீளத்தை ஒரு குறிப்பிட்ட சங்கியையுள்ள சமபகுதிகளாய் வகுக்க ஒவ்வொருபகுதியும் ஒருடிகிரி (Degree)

யெனப் பெயர்பெறும். இவ்விதம் டிகிரிக் கோடுகள் வரையப்பட்டுள்ள தண்டு ஸ்கேல் (Scale) எனப்படும். ஸ்கேல்கள் மூன்று விதம். அவை முறையே, செண்டிகிரேடு (Centigrade), பாரனீட்டு (Fahrenheit), உரோமர் (Reaumur) என்பனவாகும். எனவே, உஷ்ணநிலைமானி யும் மூவகைப்படும். செண்டிகிரேடு கருவியில் இரு எல்லைக்கோடுகளும் (Fixed points) முறையே 0, 100 எனப் பெயரளிக்கப்பெற்று, இவற் றிற்கிடையேயுள்ளநீளம் 100 டிகிரிகளாக வகுக்கப்பட்டுள்ளது. எனவே இருஎல்லைகளும் முறையே பூச்சியம் டிகிரி செண்டிகிரேடு (சுருக்கமாய் 0° செ.) நூறுடிகிரி செண்டிகிரேடு (100° செ.) என வழங்கப்பெறும். இடையேயுள்ள கோடுகள் தத்தமது உயர்ச்சிக்கேற்றவாறு 100° செ. க் குக் குறைந்து, 0° செ. க்கு அதிகப்பட்டுள்ள டிகிரிகளின் சங்கியைக் குறிப்பனவாகும். பௌதிகசாஸ்த்ரத்திற் பெரும்பாலும் செண்டிகிரேடு தெருமாமீட்டர்களே உபயோகிக்கப்படுகின்றன ; ஏனெனில் தசாம்ச தசவர்க்க (Decimals and multiples of ten) எண்களைக் கையாடுவது மிகவும் எளிதாகலான். பாரனீட்டு (Fahrenheit)க் கருவியிற் கீழெல்லை 32 டிகிரியாகவும், மேலெல்லை 212 டிகிரியாகவும் கொள்ளப்படுகின்றது. எனவே இரண்டு ஸ்திரநிலைகளுக்குமிடையே 180 டிகிரிகள் கிடைக்கும். கீழெல்லை 32° பா. எனவும் மேலெல்லை 212° பா. எனவும் வரையப்படும். பாரனீட்டு தெருமாமீட்டர் வைத்தியர்களாற் கையாளப்படுகின்றது. உரோமர் (Reaumur)கருவியில் கீழெல்லை 0 டிகிரியாகவும், மேலெல்லை எண்பது டிகிரியாகவும் பெயரிடப்பட்டு, இடைவெளி 80 டிகிரிகளாக வகுக்கப்படுகின்றது. எனவே பனிக்கட்டிஉருகும்உஷ்ணநிலை 0° உரோ. தண்ணீர் பொங்கும் உஷ்ணநிலை 80° உரோ., என்பது கிடைக்கும். இந்த ஸ்கேலை ஜெருமானியர் (Germans)மட்டுமே உபயோகிக்கிறார்கள், ஒரு தெருமாமீட்டரின்குண்டைச் சரீரஆரோக்கியம் பொருந்திய ஒரு மனிதனது நாவின் கீழேயுள்ளதசையில் மூன்றுநிமிஷநேரம்வைத்திருந் தால், கருவியானது அவன்சரீரஉஷ்ணநிலையை (Temperature)ஸ்கேல்

வகுப்புக்கேற்றவாறு சுமார் 37° செ. அல்லது 98·5° பா. அல்லது 29·5° உரோ. எனக் காட்டும். அநேகம் பாத்திரங்களிலுள்ள தண்ணீர் பற்பல உஷ்ணநிலைகளிலிருக்க அவ்வுஷ்ணநிலைகளின் நுண்ணிய வித்தியாசங்களை நமது உடம்பின் உணர்ச்சியால்மட்டுமே திண்ணமாகக் கண்டுபிடிப்பது இயலாதகாரியமாகும். ஆனால், ஒரு தெருமாமீட்டரைக் கொண்டு அவற்றின் உஷ்ணநிலைகளை முறையே பரிசோதித்து உறுதியான எண்களால் உணர்த்தலாம். தெருமாமீட்டரின் தண்டை நீண்டதாகச்செய்து டிகிரிக்கோடுகளை உயர்ந்தஸ்திரநிலைக்கு மேலாகவும் தாழ்ந்த ஸ்திரநிலைக்குக் கீழாகவும் தண்டின்மேல் வரைந்துகொண்டால், எண்ணை முதலியனபொங்குங்காலேற்படும் 100° செ.க்குமிகுந்த உஷ்ணநிலைகளையும், பனிக்கட்டியைவிடக் குளிர்ச்சியான, அதாவது 0° செ. க்குக் குறைந்த உஷ்ணநிலைகளையும் அளக்கலாம். இத்தருணம், பாரனீட்டு ஸ்கேலின் தாழ்ந்த ஸ்திரஎல்லை 32° பா. எனக்கொள்ளப்பட்டதற்குக் காரணங்கூறுதல் பொருந்தும். இந்த ஸ்கேலை இயற்றிய பாரனீட்டு எனப் பெயர்பூண்ட பிரெஞ்சு ஆசிரியரானவர் பனிக்கட்டியைவிடக் குளிர்ந்தவஸ்துவைத் தயாரிசெய்யவேண்டி, பனிக்கட்டியிற் சிறிது உப்பைக் கலந்தார். கலக்கவும் பனிக்கட்டி உருகிற்று. உருகிற்றேயெனினும், கலப்புப்பொருள் மிகக்குளிர்ந்துவிட்டது. இதன் உஷ்ணநிலை-18° செ., அதாவது 0° செ. க்குக்கீழே 18° செ. குறைந்ததாகும். இந்த உஷ்ணநிலையையே அவர் தாழ்ந்தஸ்திரஎல்லையாகவைத்து 0° பா. எனப்பெயரிட்டார். 0° பா., செண்டிகிரேடில்-18° ஆகவே, அதிலிருந்து பனிக்கட்டி உருகும் உஷ்ணநிலை 32° பா. எனக் கணக்கிடப்படுகின்றது.

இவ்வளவோடு உஷ்ணநிலைமானி, உஷ்ணநிலையளத்தல் இவற்றொடுகூடிய அளவுப்பெருக்கவியலைமுடித்து உஷ்ண இராசி இயலிற் பிரவர்த்திப்போம்.

[தொடரும்.]

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

கம்பராமாயணம் குகப்படலம் "வந்தெதிரே தொழுதானை" என்ற பாட்டுக்கு ஒரு திருந்த உரை.

இப்பாட்டும் இதற்கு யான் முந்திய உரைகாரரை அடியொற்றி யெழுதிய உரையும் "கம்பராமாயண இன்கவித்திரட்டு" 332-ம் பாட்டும் அதன் உரையுமாகச் "செந்தமிழ்" உடு-ம் தொகுதி சூஎ-ம் பக்கத்திற் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாட்டும் அவ்வுரையும் வருமாறு:—

வந்தெதிரே தொழுதானை வணங்கினான்; மலர்இருந்த
அந்தணனும் தனைவணங்கும் அவனும்அவன் அடிவீழ்ந்தான்:
தந்தையினும் களிகூரத் தழுவினான், தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்.

இ-ள். வந்து எதிரே (காணும்படி நெருங்கிய போது) கும்பிட்ட குகனைப் பரதனும் கும்பிட்டான்; குகன் பரதன்பாதங்களிற் பணிந்தான்; (பணிந்தவனைப்) பரதன் (வாரியெடுத்து மார்போடணைத்துத்) தழுவினான்.

இதன்பின் வருவது புதிய திருத்தஉரை.

(குகன்,) வந்து, எதிரே (கைகூப்பித்) தொழுத பரதனை (க் காலில் விழுந்து) வணங்கினான். பிரமதேவனும் அடிபணியும் (பெருமையுடைய) பரதனும் குகன்காலில் விழுந்தான். பெரியோர்சிந்தையுள்ளும் சென்னிமீதும் வீற்றிருக்கும் (படி மேம்பட்ட) பெரும்புகழ்படைத்தவனாகிய குகன் தன் தந்தை (யைத் தழுவுதலில் தனக்குண்டாம் களி) யினும் அதிகமான களிப்புண்டாகப் பரதனைத் தழுவினான்.

தந்தை மகனைத்தழுவுதல்போலக் குகன் பரதனைத் தழுவினு னெனப் பொருள்கொள்ளல் குகனுடைய அகங்காரமற்ற பணிவுடைமை யோடு பொருந்தாது.

வேடனைச் சக்கரவர்த்திகுமாரன் காலில் விழுந்து வணங்கல் தகுதியன்றெனக்கொண்டு முந்திய உரைகளிற் பரதன் குகன்காலில் விழுந்தானென்று கூறப்படவில்லை. இப்பாட்டின்கருத்தை ஊன்றி நோக்கியபோது மேலே புதிதாக எழுதிய உரை புலப்பட்டது. இப் புத்துரையை அடுத்தபாட்டில் வரும் 'தழுவின புளினர் வேந்தன்' என்பது வலியுறுத்துகின்றது. முந்திய உரைகாரர் தாம் இப் பாட்டுக்குச் செய்த உரைக்கு முரணுகாதபடி 'தழுவின' என்பதற்கு அதன் வழக்கமான செம்பொருளல்லாத 'தழுவப்பட்ட' என்று இடர்ப் பட்டுப் பொருள்கூறினர்.

வேந்தர்குலத்தினனுன பரதன் வேடர்குலத்தவனுன குகனை அடிபணிதல் தகாததன்று-தக்கதே-என உய்த்துணரவைப்பாராய்ப் பிராமணர்தலைவனுயிருத்தலன்றித் தேவதேவரான மூவருள்ளேயே ஒருவனுயுள்ள 'மலர் இருந்த அந்தணனும் தனைவணங்கும் அவனும்' எனப் பரதனை விசேடித்தாரென்க.

மூத்த வேட்டுவக் குகன்காலில் இளைய கோப்பரதன் வீழ்ந்தது வேளாண்குலத்து முதிய அப்பமூர்த்திகாலில் விப்பிரகுலத்துப் பிள்ளைப்பருவச் சம்பந்தமூர்த்தி வீழ்ந்ததுபோலத் தக்கசெயலேயா மென்க. (பெரியபுராணம் திருநாவுக்கரசுநாயனுர்புராணம் ருகூஎ-ம் பாட்டைப் பார்க்க.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௩அச—ஆம் பக்கத்தொடர்ச்சி.]

359. " தயிர்உடைக்கும் மத்தென்ன உலகைநலி
சம்பரனைத் தடிந்த அந்நாள்,
அயிர்கிடக்கும் நிலவலயத் தயல்அறிய,
நீஉடல்நான் ஆவி யென்று,
செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய்!
செப்பினுய்; திறம்பா நின்சொல்:
உயிர்கிடக்க உடலைவிசும் பேற்றினர்
உணர்விறந்த கூற்றி னரே!"

இ-ள். "தயிரை உடைக்கின்ற மத்துப்போல, உலகத்தோரை வருத்திய சம்பாசுரனை (நீ) கொன்ற அந்தக் காலத்தில், (யான் உனக்குத் துணையாய்நின்ற நன்றி பாராட்டி,) உன்னை உடலென்றும் என்னை உயிரென்றும், (அந்தப் போரைப் பார்க்க வந்து) பக்கத்தில்நின்றவர்கள் (ஆகிய மண்ணோர் விண்ணோர் பலரும்) அறிய (ப் பகிரங்கமாக) ச் சொன்னுய். உன் வார்த்தைகள் (என்றும்) தவறுதனவாம். (அங்ஙன மாகவும், அவ் வார்த்தைகளைக் கேட்டே யிருக்கவும்,) அறிவுகெட்ட யமனர் (எப்போதும் உடலைப் பூமியிலே கிடக்கவிட்டு உயிரைக்கொண்டு போகும் வழக்கத்தையும் மறந்து இப்போது) உயிர் பூமியிலே கிடக்க (விட்டு) உடலைச் சுவர்க்கத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்!"

தயிர் உலகத்துக்கும் சம்பரன் மத்துக்கும் உவமை. உடைத்தல் நலிதலுக்கு உவமை. உறுதி கெட்டுக் குலைந்து சிதற அடிக்கப்படுதல், தயிருக்கும் உலகத்துக்கும் பொது. உலகு, ஆகுபெயராய் உலகத்தோரை உணர்த்திபது. நலி, பிறவினை, வருத்தலென்னும்பொருட்டு. தடிதல் - கொல்லல். அந்நாள் - தசரத சம்பராசுர யுத்ததினம். அயிர் - நுண்மணல். வலயம் - வட்டம். பூமியை நிலவலயமென்றும் குவலயமென்றும் கூறுவர். நிலம், கு, இரண்டும் பூமியின் பெயர்கள். கடல்

(சூழ்ந்த நில) வலய மெனற்பாலது, செய்யுளாதலால், சுருக்கமாகக் கடல்வலய மெனப்பட்டது. அயல் - அருகு; பக்கம்; ஆகுபெயராய்ப் பக்கத்தில் நின்றாரை உணர்த்தியது. 'நீ' தசரதனையும், 'நான்' சடாயுவையும் உணர்த்தின. செயிர் - குற்றம். கிடத்தல் செய்யாத - கிடவாத. திறம்புதல் - தவறுதல். உயிர் சடாயுவையும் உடல் தசரதனையும் குறித்தன. கூற்று - எமன். கூற்றினர் என்பதில் இன் சாரியை; ஆர் இகழ்ச்சிகுறித்த பன்மைவிகுதி. 'தடிந்தவாளாய்' என்றும் பாடம்.

"'பாயு மாரிபோற் பகழி சிந்தினர் - ஆயர் மத்தெறி தயிரி னுயி னர்' எனச் சிந்தாமணியிலுங் காண்க. 'மத்துறு தண்டயி ரிற்புலன் றீக்கது வக்கலங்கி - வித்துரு வேனை விடுதிகண்டாய்' என்றார் ஆளுடையவடிகளும்."

தசரதன் தன்னை உடலென்றும் சடாயுவை உயிரென்றும் உரிமை பாராட்டி உரைத்த உபசாரவார்த்தைகளை ஆதாரமாகக்கொண்டு 'உயிர் கிடக்க உடலை விசும்பேற்றினர் உணர்விறந்த கூற்றினரே' என்று சடாயுகூற்றாகக் கவி இனிதமைத்த கடையடி, காதுக்கும் கருத்துக் கும் கழிபெருங் களியளிப்பதாய், ஒருமுறை கேட்டால் ஒருநாளும் மறவாததாய்ச் சொன்னயம் பொருணயத்தோடு தொனிநயமும் ஒருங்கு பொருந்தியிருப்பது பலமுறைநோக்கிப் பாராட்டற்பாலது.

[என்று இவ்வாறு தசரதனது சாவுக்கு வருந்திப் புலம்பிய சடாயு 'பேதைமையால் யாது செய்தேன், வீரர்போல எரியில் வீழ்ந்து இறவாமல், மாதர்போல மண்ணில் விழுந்து அழுதேனே' யென்று மனத் துள்ளே நினைந்து வருத்தந் தவிர்ந்து எழுந்திருந்தான். இராமலக்குமணர் அவன் அகத்தில் நிகழ்ந்த கருத்தை முகத்தில் விளங்கிய குறிப் பால் அறிந்தாராய், 'இன்னும் உயிர்விட்டிலேனல்' என்று இரங்கி வருந்தியவன் இப்போது உயிர்விட உறுதிசெய்துள்ளானென் றுன்னினர் கள். அவன், அவர்களை நிமிர்ந்துநோக்கி "யான் சூரியனது சாரதியான அருணன்புதல்வன், சடாயு வென்னும் பெயரினேன், சம்பாதியின் தம்பி, தசரதன் நண்பன், பாலப்பருவத்திலே என் தந்தையுடன் சூரியன் சுற்றும் பூதலம்முற்றும் சுற்றியிருக்கின்றேன்" என்றான். எனவே, இராமலக்குமணர் அவனை அன்புடன் அஞ்சலிசெய்து, மாண்டு

வான் அடைந்த தசரதன் மீண்டு மண் அடையக் கண்டார்போலக் களி கூர்ந்தார்கள்.]

### சடாயு நெருப்பில்விழுந்து இறப்பேனெனல்.

360\. மருவினிய குணத்தவரை இருசிறகால்
உறத்தழுவி "மக்காள்! நீரே
உரியகடன் வினையேற்கும் உதவுவீர்:
உடல்இரண்டுக் குயிர்ஒன் றானான்
பிரியவும்தான் பிரியாதே இனிதிருக்கும்
உடற்பொறையாம் பீழை பாரா
தெரியதனில் இன்றேபுக் கிறவேனேல்,
இத்துயரம் மறவேன்" என்றான்.

இ-ள். (சடாயு, ஒரு தாய் தன் இரட்டைப்பிள்ளைகளை ஒருகைக் கொருபிள்ளையாக இருகையாலும் இறுக அணைத்தல்போல) இராமலக்கு மணரை இரண்டுசிறகுகளாலும் (தன் உடம்போடு அழுந்திப்) பொருந்தத் தழுவிக்கொண்டு "பிள்ளைகளே! (உங்கள் தந்தைக்குச்செய்ததுபோல) எனக்கும் (இறந்தபின் செய்தற்கு) உரிய (ஈமக்) கடனை(ச் செய்து) உத வுங்கள். (என்னுடல் தன்னுடலென்னும்) ஈருடலுக்கும் ஒருயிராயிருந்த வன் பிரிந்துபோகவும், தான்நீங்காமலிருக்கின்ற(இந்தச், சுமையாகவுள்ள தேகத்தை (நான்) பார்த்துக்கொண்டி(ருக்கும் பரிபவம் இ)ராமல்(ஒழிய,) இப்போதே அக்கினியிற்பிரவேசித்து (இறப்பேன்;) இறவாதிருப்பேனா னால் (ஆற்றுதற்கரிய) இந்தத் துன்பத்தை மறக்கமாட்டேன்" என்றான்.

உற—பொருந்த. பிரியவும்—(என்னைவிட்டு அல்லது இவ்வுலகை விட்டு) நீங்கவும். பிரியாதே—(இவ்வுலகை விட்டு) நீங்காமல். இனிது இருக்கும்—(தசரதன் இறந்தும் தான் ஒழிந்துபோகாமல் பூமிக்குப் பாரமாய் மானமின்றி) இனிமையாக(த் தங்கி)இருக்கின்ற. இனிது, இங்கே சடாயுவின் வெறுப்பை உணர்த்தியது; இகழ்ச்சியை யுணர்த்திய தெனவுமாம். உடற்பொறை—உடலாகிய சுமை; பொறை உடலெனப் பிரித்துப் பொருத்திப் பொருள்கூறியிருத்தல் காண்க. பீழை-துன்பம்; ஆகுபெயராய்த் துன்பம் தருவதை யுணர்த்திநின்றது புக்கு—புகுந்து —பிரவேசித்து.

'உடற்பொறையார் பிழைப்பா ராரோ' என்பதும் பாடம். இப்பாடம் கொண்டால், தசாதனது பல நண்பருள் ஒவ்வொருவரும் அவரவருடலும் அவனுடலும் ஆக இரண்டுடலுக்கும் அவன் ஓர் உயிரானுனென்று சொல்லும்படி அவர்களெல்லாரிடத்தும் அன்பு பூண்டிருந்த அவன் உலகைவிட்டு நீங்கவும், நீங்காமலிருக்கும் உடலுடையானான அவன் நண்பர் யார்தாம் சீவித்திருப்பார்?, ஒருவருமே இரார்; அவருள் ஒருவனுன நான் (சடாயு) இறக்கக்கடவேன், இறவேனுயின் அவன் பிரிவினுல் ஏற்பட்ட இந்தப் பொறுக்கொணுத துன்பும் மறக்கொணுது என்று சடாயுகூறினுனென்று பொருள் கூறலாம்.

தசாதனது நன்பர்களுக்கு அவர்களுடம்பு அவன் நண்பினுற் சுமையாகத் தோன்ருமல் இன்பந்தந்திருந்தது, அவனும் அவனுடன் அவன் நண்பும் மறையவே, சுமையாகித் துன்பந்தருவதாயிற்றென்பது குறிப்பு.

[மேலே விவரித்தவாறு கூறிய சடாயுவை இராமலக்குமணர் கை கூப்பிக் கண்ணீர்துளிக்க நோக்கி, "எங்களுக்கு இடர் உற்ற இடத்து உதவுதற்குரிய எங்கள் தந்தை இறந்துபோனுன். அவன் இறந்த துன்பத்தை நீக்கி அவனுக்குப் பிரதியாக யாங்கள் இன்பம் எய்த உற்ற நீயும் இறந்து எங்களைக் கைவிட்டாயானுல், எங்களுக்குக் களைகணுயுள்ளார் யார் இருக்கின்ருர்! எங்களை அவன் நீங்கியதுபோல நீயும் நீங்கலாமோ?" என்று வருந்திய மனத்தினராய் மறுகிநின்றவர்களை நோக்கிச் சடாயு, "யான் உயிரோடிருத்தல் உங்களுக்கு உதவியாமென்கின்றீராதலால், நீங்கள் அயோத்தியை அடையும் அளவும் யான் உயிர்தரித்திருந்து அப்பால் தசாதனைச் சார்வேன்" என்ருன். பின்பு "அரசன் இறந்ததனுல் அரசுசெய்தற்குரிய நீங்கள் அது செய்யாமல் வனத்துக்குவந்தது மனத்தை வருத்துகின்றது. வந்த காரணத்தைச் சொல்லுங்கள். நீங்கள் அரசாளுதற்கு இடையூறியற்றியவர் அரக்கராயினும் அசுரராயினும் தேவராயினும் யாவராயினும் அவர்களைக் கொன்று உங்கள் அரசை மீட்டு உங்களுக்குத் தருவேன்" என்ருன். அப்போது இராமன் குறிப்பிக்க, இலக்குமணன், கைகேயியால் நிகழ்ந்த செயல்களைக் கூறினுன். உடனே சடாயு இராமனை இனிது நோக்கித் "தந்தையைச் சத்தியந்தவளுதவனுக்கிச் சிறியதாய்வார்த்தையைச்

சென்னிமேலேற்றுத் தம்பிக்குத் தன் அரசாட்சியைத் தந்த தியாக சிரேட்டனே! நீ செய்ததுபோற் செய்தவர் எவரும் இலர் என்று அவனை அன்புமீதூர ஆலிங்கனஞ்செய்து, உச்சி மோந்து, ஆனந்தக் கண்ணீராட்டிச் "சக்கரவர்த்தியையும் என்னையும் அளவற்ற புகழ் பெற்றவராக்கினுய்" என்றான். பின்பு சீதையைநோக்கி "இந்த நங்கை இன்னுளெனச் சொல்வாயாக என, இலக்குமணன், மிதிலையிற் சிவன் வில்லொடித்ததும் திருமணம் முடித்ததும் நடுவாக அவ்விருசெயல் களுக்கும் முன்னும் பின்னும் நிகழ்ந்த செய்திகளுள், இதன்முன்னம் சொன்ன கைகேசி செயல்தவிர, எஞ்சிய யாவையும் இயம்பினன். அதன் பின், கழுகரசன் மூவரையும் நோக்கி "நீங்கள் இங்கே தங்கி யினிதிருங் கள். யான் உங்களைக் காத்து வருவேன்" என்றான். அதற்கு இராமன் "அகத்தியமுனிவன் எங்களைக் கோதாவரித்துறையில் ஒரு வளாகம் வசிக்கத் தக்கதென நன்கு ஆலோசித்துக் கூறியிருக்கின்றான். அங்கே வாழ்தல் என் கருத்து" என்றான். "அது மிகவும் நல்லதே. அங்கே செல்லுங்கள், அவ்விடத்தைக் காட்டுவேன்" என்று தன் சிறகுநிழலிலே இராமனுதியர் ஏக, விண்ணிற் பறந்துசென்று அவ் வளாகத்தைக் காட்டிவிட்டுச் சடாயு திரும்பிப்போனன். அவர்கள், அந்த வளாகத் தை அடைந்தார்கள். அவன், இராமலக்குமணரைத் தன் மக்களாக வும் சீதையை மருமகளாகவும் அன்புபாராட்டி அப் பக்கத்துள்ள அரக்கரால் அவர்கள் அபாயம் அடையாமல் அவர்களைத் தன் குஞ்சு களைப் பார்த்துக்கொள்ளும் பறவைபோலப் பார்த்துப் பாதுகாத்து வருவானுனன்.]

சடாயுகாண்படலம் முற்றிற்று.

---

## சூர்ப்பநகைப்படலம்.

சூர்ப்பநகைசெய்தியைச் சொல்வது.

**இராமலக்குமணர் சீதையுடன் கோதாவரியாற்றைக் காணுதல்.**

**கோதாவரிநதிக்கும் சான்றோர்கவிக்கும் சிலேடை.**

361. புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து, புலத்திற் றாகி,
அவிஅகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறிஅ ளாவிச்
சவிஉறத் தெளிந்து, தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்,
கவிஎனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்,

இ-ள். புவியினுக்கு அணியாய்—கோதாவரிநதி பூமிக்கு அலங்காரமாய், சான்றோர்கவி பூமியில் உள்ளோர் (ஆகிய கற்றோர்மனத்து)க்குப் பூடணமாய்; ஆன்றபொருள் தந்து—கோ. நதி (தன்னிடத்துள்ள பொன் மணல் முதலியனவும் தான் மலையினின்றும் நிலங்களினின்றும் வாரிக் கொண்டுவந்த வயிர முதலியனவும் ஆன) வித்தாரமான பொருள்களை (த்தேடிக்கொள்வார்க்கு)க் கொடுத்து, சா. கவி (அறம் பொருள் இன்பம் வீடு என்னும்) மாட்சிமைப்பட்ட பொருள்களை (க் கற்போர்க்கு)க் கொடுத்து; புலத்திற்று ஆகி—கோ. நதி (வாய்க்கால்வழியே சென்று பாய்ந்து) வயலினிடத்தினதாகி, சா. கவி (தன்னைக் கற்றோர்) அறிவினிடத்தினதாகி; அவி அகத்துறைகள் தாங்கி—கோ. நதி (வெப்பத்தைத்) தணிக்கின்ற இடங்களான (நீரொடு) துறைகளை உடையதாய், சா. கவி (காமவெப்பத்தைத்) தணிக்கின்ற (களவு கற்பு என்னும்) அகப்பொருட்டுறைகளை உடையதாய்; ஐந்திணை நெறி அளாவி—கோ. நதி (குறிஞ்சி முதலிய) ஐவகைநிலங்களின்வழியே (சென்று அந்த நிலங்களில்) கலந்து, சா. கவி (குறிஞ்சி முதலிய ஐவகைநிலங்களிற் காதலர்திறத்து நிகழும் புணர்தல் இருத்தல் பிரிதல் இரங்கல் ஊடல் என்னும்) ஐந்துவகை ஒழுக்கங்களையும் பொருந்தி; சவி உறத் தெளிந்து—கோ. நதி ஒளி (ஊடுருவிச்சென்று) பொருந்த (மிக்க ஆழத்துள்ள நுண்பொருள்களும் நன்கு விளங்க)த் தெளிந்ததாய், சா. கவி (மயங்கவைத்தலென்னும் குற்றம் நீங்கி விளங்கவைத்தலென்னும்) அழகு பொருந்தத் தெளிவான (நடையுடைய) தாகி; தண்ணென்று—கோ நதி குளிர்ந்ததாகி, சா. கவி (படிப்போர் நாவுக்கும் கேட்போர் செவிக்கும் சிந்திப்போர் சிந்தைக்கும் இன்பமாகிய) குளிர்ச்சியை அளிப்பதாகி; ஒழுக்கமும் தழுவி—(மேற்கூறிய தன்மைகளோடு) கோ. நதி (ஜீவநதியாய் எக்காலத்தும் தண்ணீர் பெருகியோடிச்) செல்லுகையும் பொருந்தி, சா. கவி (நல்) ஒழுக்க (விளக்க)மும் தன்பாற் கொண்டு (இருத்தலால்,) சான்றோர் கவியென்று சொல்லும்படியிருந்த கோதாவரி யாற்றை இராமலக்குமணர் (சீதையுடன்) கண்டார்கள்.

அணி—அலங்காரம்; ஆபரணம். ஆன்ற—விரிவான; மாட்சிமைப்பட்ட. பொருள்—பண்டம்; அறம் பொருள் இன்பம் வீடென்னும் சதுர்வித புருஷார்த்தங்கள். "அறம்பொருள் இன்பம் வீடென நான்கும்—

திறம்படு பொருளெனுச் செப்புவர் புலவர்". பொருள், "செம்பொருள் இலக்கணைப்பொருள் குறிப்புப்பொருள் என்னும் மூவகைப்பொருளையும் குறித்தலுமாம். புலம்—வயல்; அறிவு. புலித்திற்று-புலத்தினது. அவி, பிறவினையாய்த் தணிக்கும் என்று பொருள்படநின்றது. அகம்— இடம்; அகப்பொருள். "அகமாவது ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் தம்முட்கூடுகின்றகாலத்துப் பிறந்து அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவராலும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்து உணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம். இன்பம் பற்றி அகத்தே நிகழும் ஒழுக்கத்தை 'அகம்' என்றது ஆகுபெயர்! அகம்—உள், மனம்" திணை - குறிஞ்சிமுதலியதிணைகள்; ஒழுக்கம். நெறி—வழி; முறை. அளாவி - கலந்து. சவி—ஒளி; அழகு. தண்ணென்று—குளிர்ந்து. ஒழுக்கம்—சீலம்; செல்லுகை. 'தண்ணெனொழுக்கம்' என்பதும் பாடம்.

"கோதாவிரி யென்னும் பாடம் பிழையுடைத்து. என்னை? பிங்கலந்தையினும் சூடாமணிநிகண்டினும் வடமொழி அமரத்தினும் கோதாவரியென்றே வழங்கலான்."

ஆன்றபொருள்தந்து என்பதற்கு மாட்சிமையுடைய அர்த்தவிசேடங்களைத் தோன்றுவித்து என்றும், அவி அகத்துறைகள் தாங்கி என்பதற்கு (நதியைக் குறிக்குமிடத்து) அவிப்பாகத்தைத் தருகின்ற யாகசாலைகளையுடைய துறைகளைத் தாங்கியென்றும் (கவியைக் குறிக்குமிடத்துத்) தேவருணவினையொத்த அகப்பொருட்டுறைகளைக்கொண்டு என்றும் அடக்குகின்ற மனோலய மார்க்கங்களை உடைத்தாகி யென்றும், ஐந்திணை நெறி அளாவியென்பதற்கு (ஐந்திணையை ஐந்தின் இணையாகிய பத்து எனக் கொண்டு) சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய பத்துவிதத்திற் கலந்து அழகு பொருந்தி என்றும் முந்திய உரைகாரர் பொருள்செய்திருத்தல் காண்க.

"வீரர் கண்டார் எனச் சிறப்புடைய ஆடவர்மேல்வைத்துக் கூறினது சீதை கண்டதற்கும் உபலக்ஷணம்."

## கோதாவரிவருணனை.

[அந்த ஆறு தாமரையும் குவளையும் பொலிந்துவிளங்க அலைகளால் உதிர்ந்த மலர்களை அவர்கள் நின்ற கரையிலே ஒதுக்கிய காட்சி,

அவர்களை முகம் மலர்ந்து கண்குளிர நோக்கி, அவர்கள் கால்களிற் கைந் நிறைய மலர்களை வாரியிட்டு அருச்சித்தல்போன்றது.

அந் நதி, குவளைகளினின்று தேன்வடியாநிற்க, இரைந்துகொண்டு செல்வது அவர்கள் வனத்தில் வாழும் கட்டதசையைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறியழுவதுபோன்றது.

அந் நதிவளங்கண்டு இராமனும் சீதையும் களித்தல்.

அந்நதியிலே ஆணும் பெண்ணுமாய் இணைபிரியாத சக்கரவாகப் பறவைகளை இராமன் கண்டு அவைபோன்ற சீதைதனங்கள்மேற் கண் வைத்தான். அவள் அந்நதியின் அருகில் உள்ள மணற்குன்றுகளைக் கண்டு அவை போன்ற அவன் தோள்கள்மேல் மனம்வைத்தாள்.]

362. ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன், உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்;
மாதவள் தானும், ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.

இ-ள். (அந்த ஆற்றின் அருகே) அன்னங்கள் நடக்கக் கண்ட இராமன், சீதைநடையை நோக்கிக் குறுஞ்சிரிப்புக்கொண்டான். அவள், அங்கு வந்து தண்ணீர்குடித்துத் திரும்பிப்போகின்ற யானைகளின் நடையைக் கண்டு புன்னகைபுரிந்தாள்.

அன்னநடை சீதைநடைக்கும் ஆனைநடை இராமன் நடைக்கும் உவமை. ஓதிமம் - அன்னம். ஒதுங்கல்—நடத்தல் (பத்துப்பாட்டு); விலகல். உழை - பக்கம். உழையள் - பக்கத்துள்ளவள். முறுவல் - சிரிப்பு. மாதவள் என்பதில் 'அவள்' பகுதிப்பொருள் விகுதி. போதகம்—யானை. பூத்தல்—தோன்றுவித்தல் - செய்தல்.

புன்னகை புன்முறுவல் இளநகை சிறுநகை குறுநகை என்பவை குறுஞ்சிரிப்பு என்னும் பொருள்குறித்தவை. புதியதோர் முறுவல்—இளநகை. இளமையும் புதுமையும் முதுமைக்கு எதிரிடையாதல் கொண்டு இளநகை யென்று பொருள்பட (ப்போதகமென்று தொடங்கிய அடிக்கு மோனை அமைய) ப் 'புதியதோர்முறுவல்' என்றார்.

அன்னங்கள் இயல்பாக மனிதரைக்கண்டு விலகிப்போகின்றவை களைச் சீதையின் நடைக்குத் தோற்று ஒதுங்குவனவாகக்கொண்டு, அவைகளின் நடையின் தாழ்ச்சிக்கு இகழ்ச்சியும் அவள் நடையின்

உயர்ச்சிக்கு மகிழ்ச்சியும் ஒருங்கே காட்டும் புன்னகையை இராமன் புரிந்தானென்றார். இதற்குப் பொருத்தமாக நடத்தலுக்கும் விலகுதலுக்கும் பொதுவான ஒதுங்குதலென்றசொல்லைப் பிரயோகித்திருப்பது கவனிக்கத்தக்கது.

நீருண்ணவந்த யானைகள் தாம் வந்த நோக்கமாகிய நீருண்ணல் நிறைவேறவே இயல்பாகத் திரும்பிப்போனவைகளை இராமனது நடைக்குத் தமது நடை தோற்றுப்போயினவென்றுகொண்டு சீதை அவற்றின் நடைக்கு இகழ்ச்சியும் அவன் நடைக்கு மகிழ்ச்சியும் புலப்படுத்தும் சிறுநகையைச் செய்தாளென்றார். இங்கே நீருண்ண நதியைநோக்கி வந்த யானைகள் திரும்பும்போது புறங்காட்டிச்செல்வது போரிலே தோற்றார் புறங்காட்டிச் செல்வதுபோலுமென உய்த்துணரவைத்தா ரென்னலாம். "வந்துநீ ருண்ணல் செய்த—போதகம் நடப்பநோக்கி" என்னுமல் "வந்துநீ ருண்டு மீளும்—போதகம் நடப்ப நோக்கி" என்றது இந்தக் கருத்தை வலியுறுத்துதல் காண்க.

363. வில்இயல் தடக்கை வீரன், வீங்குநீர் ஆற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டான், மங்கைதன் மருங்குல் நோக்க;
எல்லிஅம் குவளைக் கானத் திடையிடை மலர்ந்து நின்ற
அல்லிஅம் கமலம் கண்டாள், அண்ணல்தன் வடிவங் கண்டாள்.

இ-ள். இராமன் (அந்தக் கோதாவரி) நதியினிடத்தே கொடிகள் அசைவதைப்பார்த்துச் சீதையின் இடையைநோக்காநிற்க, (அவள்) நீலோற்பலக்காட்டிலே ஊடே ஊடே மலர்ந்துநின்ற செந்தாமரைகளைக் கண்டு அவன் திருமேனியை நோக்கினாள்.

வில் இயல் தடம் கை வீரன் - விற்பொருந்திய பெரிய கையை உடைய வீரனான இராமன். வீங்கு நீர் ஆறு - மிகுந்த தண்ணீர் (ப்பெருக்கு) உடைய (கோதாவரி) யாறு. பாங்கர் - இடம். வல்லி - கொடி. நுடங்கல் - அசைதல். மருங்கு - இடை. எல்லி - இரவு; இரவினது இருளின் கருமையைக் குறித்தது. கானம் - காடு - தொகுதி. எல்லி அம் குவளைக் கானம் - கருமையுடைய அழகிய நீலோற்பலக் காடு. அல்லி - அக இதழ்.

கொடி சீதையின் இடைக்கும் நீலோற்பலக்காடு இராமன் மேனிக்கும் அந்தக்காட்டில் ஊடே ஊடே மலர்ந்த செந்தாமரைகள் அவன் கரிய

மேனியிலே சிவந்து விளங்கிய கண் வாய் கொப்பூழ் கை கால்களாகிய உறுப்புக்களுக்கும் உவமை. "வாய் கண் கை உந்திபதம்—கோகனகம் பத்தினர்" (திருவேங்கடமாலை). 'வில்லுயர்' 'வடிவு' என்பனவும் பாடங்கள்.

[இவ்வாறு கோதாவரியாற்றின் வனப்பைநோக்கி மகிழ்வுற்ற இராம சீதையர், இலக்குமணனுடன் அந்த ஆற்றுக்கு அருகே உள்ள சோலைசூழ்ந்த பஞ்சவடி என்னும் இடத்தைச் சேர்ந்தார்கள்: அங்கே இலக்குமணன் இயற்றிய பன்னசாலையில் இனிது வாழ்வாராயினர்.

சூர்ப்பநகை இராமனைக்காணல்.

முடிவுகாலம் முற்றும்போது கொல்லுதற்கு உடன்பிறந்த நோய் போல இராவணனைக் குடியோடு அடியோடு தொலைக்க அவனுடன்பிறந்தவளும் செந்தீப்போலச் சிவந்த தலைமயிரும் கரும்பாம்புபோலக் கறுத்த உடலும் உடையவளுமான சூர்ப்பநகை ஏதோ கொடியதோர் குறிப்புடனே காட்டிலே தனியே எதேச்சையாகத் திரிந்துகொண்டிருந்தவள் இராமன் இருந்த இடத்தை எதிர்ச்சையாக எய்தி அவனைக் கண்டாள்.]

சூர்ப்பநகை இராமன் அழகில் ஈடுபடல்.

364. சிந்தையின் உறைபவற் குருவம் தீர்ந்ததால்;
இந்திரற் காயிரம் நயனம்; ஈசற்கு
முந்திய மலர்க்கண்ஓர் மூன்று; நான்குதோள்
உந்தியின் உலகளித் தாற்கென் றுன்னுவாள்.

இ - ள். (இவன், மன்மதனேவென்றால்,) மன்மதனுக்கு உருவம் (சிவன் கண்ணால் எரிக்கப்பட்டு) ஒழிந்தது; (ஆதலால், அவன் அல்லன்: இந்திரனேவென்றால்,) இந்திரனுக்கு ஆயிரங்கண்கள் (உண்டு; ஆதலால், அவனுமல்லன்: ஈசனேவென்றால்,) ஈசனுக்கு மூன்றுகண்கள் (உண்டு; ஆதலால், அவனுமல்லன்: திருமாலென்றாலோ,) திருமாலுக்கு நான்கு தோள்கள் (உண்டு; ஆதலால் அவனுமேயல்லன். அவர்கள் ஒவ்வொருவருடைய அழகுகளினும் சிறந்தவைகள் அனைத்தும் ஒருங்கே இவனிடம்காணப்படுதலால்,இவன் அவர்களுள் எவனுமெனமயங்கும்படி இலங்குகின்றான்) என்றெண்ணுவாளாயினள் (சூர்ப்பநகை).

சிந்தையின் உறைபவன் - (மக்கள்) நெஞ்சில்(காமத்துக்குக் காரணனாக) இருப்பவனான மன்மதன். மன்மதனுக்கு இதுபற்றிச் சித்தசன்

மனேசன் மனேபவன் மனேபு மனேற்பவன் என்ற பெயர்களுண்மை காண்க. தீர்ந்தது - ஒழிந்தது. ஆல்—அசை. முந்திய மலர்க்கண் ஓர் மூன்று—(மலர்களுள்ளே) முதன்மையான (செந்தாமரை, வெண்டாமரை செவ்வல்லி ஆகிய) மலர்கள்போன்ற (செங்கதிரென்னும் சூரியன், வெண்கதிரென்னும் சந்திரன், செந்தீ ஆகிய) ஒப்பற்ற கண்கள்.

உந்தி - கொப்பூழ். அளித்தல் - சிருட்டித்தல். உந்தியின் உலகு அளித்தான் - (தன்) உந்தி (யாகிய தாமரை)யில் (பிரமனைத் தோன்றுவித்து அவனைக்கொண்டு) உலகத்தைப் படைத்தவன் - திருமால்.

சூர்ப்பம் (-முறம் - சுளகு) போலும் நகத்தையுடையவளென்னும் பொருள் உள்ள ஶூர்ப்பணகா என்ற வடசொல் தமிழில் சூர்ப்பணகையென வரற்பாலது சூர்ப்பநகையென வழங்குவது தவறெனக் கொண்டு ஓர் உரையாசிரியர் சூர்ப்பணகையெனத் திருத்திப் பதிப்பித்திருக்கின்றார். தவறாயினும், நெடுங்காலம் ஆன்றோராட்சிப்பட்டுவிட்ட சொற்களை அவ்வாறே ஆளுதலே தகுதியாகத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட சொற்களுள் கோகனகம் ஒன்று என்பது நினைவுக்கு வருகின்றது. இதன் வடமொழி வடிவம் கோகநதம். இதுபோன்ற பல சொற்களை அறிஞர்கள் அறிவர். அவற்றையெல்லாம் திருத்தாமல் நெடுங்காலவழக்கம்பற்றி இப்போதுள்ளபடியே ஆளுதலே முறையாம்.

365. கற்றைஅஞ் சடையவன் கண்ணிற் காய்தலால்
இற்றவன், அன்றுதொட் டின்று காறும், தான்
நற்றவம் இயற்றிஅவ் அநங்கன் நல்உருப்
பெற்றனனுமெனப் பெயர்த்தும் எண்ணுவாள்.

இ - ள். (இராமனை மன்மதனென்றெண்ணி மன்மதன் அல்லனெனத் தெளிந்த சூர்ப்பநகை,) திரும்பவும் (அம் மன்மதன் நினைவும் இராமன் அவனினும் அதிக அழகுடையவனென்னும் நினைவும் தோன்றச்,) சிவன் (நெற்றிக்) கண்ணினல் எரித்ததனல் (எரிந்து சாம்பலாய் உருவம்) அழிந்தவனன மன்மதன் (அழிந்த) அந்நாள்முதல் இந்நாள் வரையும் நல்ல தவம் செய்து (முன்னினும்) நல்ல (அழகுடைய) வடிவத்தைப்பெற்றான்போலும் என்று எண்ணினள்.

கற்றை - மயிர்த்தொகுதி. காய்தல் - எரித்தல். இறுதல்—முடிதல்—இறத்தல்—அழிதல். காறும் - அளவும். அநங்கன் - உருவில்லாதவன்—

மன்மதன். "அநங்கன் வடசொல்; ந+அங்க+அன்; ந—எதிர்மறை குறிப்பது; அங்கம் - உடம்பு." ஆம்-போலும். பெயர்த்தும்—திரும்பவும்.

சூர்ப்பநகை இராமனது தோள்கள் முதலிய
அவயவங்களை நோக்கி மகிழ்தல்.

[சூர்ப்பநகை, இராமன் தோள்களுக்குக் கல்மலைகள் ஒப்பல்ல, நீல மலைகளே நிகராவன, மேருவும் பொன்மலையாதலால் (நிற ஒப்புமையின் மையால்) நேராகாது என்றும், அந்தத்தோள்களுக்கு இடையே விளங் கும் மார்பு கண்ணுக்கடங்காத பரப்புடையதென்றும், வீரமும் அழ கும் ஒருங்குவிளங்கும் அவன்முகத்துக்குத் தாமரையும் சந்திரனும் (கலந்து ஒன்றாயினும்) சமானமாகாவென்றும் எண்ணினாள். பூமிமீது புல்வளர்ந்து பொலிதல் இவன் திருவடி தீண்டப்பெற்று இன்பம் அடைந்த பூமிதேவியின் மயிர்ச்சிலிர்ப்பாமென்றெண்ணினாள்.]

சூர்ப்பநகை இராமன் தவவேடத்தில் ஈடுபடுதல்.

366. எவன்செய? இனியஇவ் அழகை எய்தினோன்,
அவன்செயத் திருஉடம் பலச நோற்கின்றான்:
நவன்செயத் தகையஇந் நளின நாட்டத்தன்
தவன்செயத் தவன்செய்த தவன்என்? என்கின்றாள்.

இ-ள். (தவத்தினால் அடையக்கூடிய பயன்களெல்லாவற்றினும் சிறந்த) இந்த இனிமையான அழகை அடைந்த இவன், (இவ்அழகை அடைதலினும் மிக்கதாக) யாது செய்ய (க்கருதி)த் திருமேனிவருந்தத் தவஞ்செய்கின்றான்? இவன்தவம் செய்யும்படி (யான பாக்கியத்தைப் பெறும்படி) தவம்செய்த தவம் யாது? என்றெண்ணினாள் (சூர்ப்பநகை).

எவன்—யாது. அவம்—வீண். அவம் செய—(பொழுது அல்லது அழகு அல்லது இரண்டும்) வீணாகச்செய்ய; பாழ்படும்படிசெய்ய. அலச-சோர்வுற—வாட. நோற்கின்றான்—தவம்செய்கின்றான். நவம்—புதுமை. செய்தல்—உண்டாக்கல். நளினம்—தாமரை. நாட்டம்—கண். நவம் செயத் தக்க இந் நளின நாட்டத்தன்—புதுமை (—ஆச்சரியம்) உண்டாக்கத் தக்க (அழகுடைய) இந்தத் தாமரைக்கண்ணன். அவன் நவன் தவன் என்பவை அவம் நவம் தவம் என்பவற்றின் போலிகள்.

சூர்ப்பநகை இதன்முன் இராமன் அழகை வியந்து அழகிற்சிறந்த மன்மதன் தவஞ்செய்து அதிக அழகுடைய இராமனானானோ வென்று

ளென்றார். இப்போது அவள் இராமன் தவம் செய்யும்படி, தவம் என்ன தவம் செய்தது என்று ளென்றார். இவ்விருகருத்துக்களும் மிகவும் இனிமையானகருத்துக்களென்பதும் இவற்றுள் முன்னையதினும் பின்னையது நுட்பமிக்கதென்பதும் குறித்துக்கொள்ளத்தக்கன. வேறோரிடத்துச் சீதையைத் 'தவம்செய்த தவமாம் தையல்' என்பர்.

367. வாணிலை மருங்குலான் வயங்கு சோதியைக்
காணில னேகொல்அக் கதிரின் நாயகன்?
சேணெலாம் புல்ஒளி செலுத்திச் சிந்தையில்,
நாணலன் மீமிசை நடக்கின் றானென்றாள்.

இ-ள். சூரியன், இவன் (திருமேனிக்) காந்தியைக் கண்டிலன் போலும் (காணாததனாலன்றோ, அவன்,) வெட்கப்படாமல் ஆகாயமெல்லாம் (தன்) அற்பமான ஒளியை வீசிக்கொண்டு (அந்த) ஆகாயத்திலே (தாழ்ந்த இடத்திலேயன்றி) உயரத்திலே (இறுமாப்போடு உலாப்) போகின்றான் என்றெண்ணினாள் (சூர்ப்பநகை).

வாள் நிலை மருங்குலான் - (இறுக்கிக்கட்டிய) உடைவாள் தங்கிய இடையையுடையான் (ஆன இராமன்). வயங்குதல்—பிரகாசித்தல். "சூரியன் ஒளியையும் தன்னுள் அடக்கிக்கொள்ளுதலால் 'வயங்கு சோதி' என்றாள். 'வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறைய' என்றார் அயோத்தியாகாண்டத்தில்." காணிலனேகொல்—பார்த்திலன்போலும். கதிரின் நாயகன்—கதிரினை (—கிரணங்களை) யுடைய தலைவன்—சூரியன். சேண்—ஆகாயம். புல்—அற்பமான. நாணலன் முற்றெச்சம், வெட்கப்படாமலென்னும் பொருட்டு. மீ—ஆகாயம். மிசை மேல். "முச்சுடருள் மற்றையிருசுடராகிய சந்திர அக்கினியர்போலப் பதினாறு எழு கிரணங்களையுடையனாகாமல், சூரியன் அவற்றிற்கெல்லாம் ஒளியைக் கொடுத்து வாங்கும் ஆயிரங்கிரணங்களை யுடைமையால் 'கதிரின் நாயகன்' எனப்பட்டான்". 'வாணிலா' 'காணலன்' 'நாணிலன்' என்பனவும் பாடங்கள்.

[அவள், இவன் பொன்னுடை பூண்டு மணிமுடி வனைந்து அரசாளாமல், மரவுரி உடுத்துச் சடைமுடி தரித்துத் தவம்செய்கின்றான், பீதாம்பரமும் இரத்தின கிரீடமும் இராசாங்கமும் முறையே சீரையும் சடையும் தவமும்போல இவனை அடையத் தவஞ்செய்திலபோலு

மென்றும், மற்றையோர்க்கு அணி (—அழகு) செய்தலால் அணியெனப் பட்ட ஆபரணங்கள்; அழகிற் சிறந்த இவனுக்கு அழகுசெய்யுமோ? மணிகளுக்கெல்லாம் மேலான மணிஅரசி, வேறுமணிகளினால் விளக்க முறுமோ? என்றும் எண்ணினள்.]

368. காந்திலன் இலக்கணம் எடுத்துக் காட்டிய
பாம்தரு நான்முகன் பழிப்புற் றனரோ:
இருந்தவன் இணைஅடிப் பொடியும் ஏற்கலாப்
புரந்தான் உலகெலாம் புரக்கின் றானென்றாள்.

இ-ள். (இராச) லக்கணங்கள் (ஒன்றும்) ஒளித்திடாமல் (எல்லாம் விளங்கும்படியாக, அந்த இலக்கணங்களனைத்தும் ஒருவனிடத்தில் ஒருசேர உற்றதற்கு ஓர் உதாரணமாக உலகத்தோர்க்கு) எடுத்துக் காட்டும்படி (இவனுடைய) திருமேனியை உண்டாக்கிய பிரமதேவன் பழிப்படைந்துவிட்டான்; (ஏதனாலென்றால், அந்த இலக்கணங்களுடைமையில்) இவன் காற்றூளும் பெறாத இந்திரன் எல்லா உலகங்களையும் காவல்செய் (து அரசாள்) கின்றான் (ஆக, அந்த இலக்கணங்கள் முற்றும்பெற்ற இவன் செல்வம் சிறிதுமின்றி யிருத்தலால் எங்க) என்றெண்ணினள் (சூர்ப்பநகை).

காத்தல் - ஒளித்தல். 'எடுத்துக்காட்டிய' என்பது ஒருசொன்னீர்மைத்தாய்ச் செய்யிய என்னும்வாய்பாட்டு வினையெச்சமாய் 'எடுத்துக்காட்ட' என்னும்பொருட்டாய்நின்றது. பாம் - உடம்பு; தருதல் - உண்டாக்குதல் (தமிழ்ச்சொல்லகராதி). அரோ அசை. இருந்தவன் - (இவ்வனத்தில்) இருந்தவன் (ஆகிய இராமன்); பெரிய தவசி (ஆகிய இராமன்). இருமை - பெருமை. இணை - இரண்டு; ஒப்பு. இணையடி - இரண்டுபாதங்கள்; வேறு ஒப்பின்றி ஒன்றுக்கு மற்றொன்றே ஒப்பான பாதங்கள். ஏற்கலா(த) - பெறாத. (ஏற்றன்று - பெற்றது. பரிபாடல்). இரந்தவன் என்றும் பாடம். இந்தப்பாடங்கொண்டால் மூன்றும் அடிக்கு (த் தவங்கிடந்து) வேண்டினும் இவனுடைய இரு (கால்களில் ஒரு) காலின் தூளு (ள் ஒன்றினுடைய ஒப்பு) ம் பெறாத என்று பொருள் கொள்க.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

# தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர் ப்ருஹ்மஸ்ரீ
P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள் எழுதுவது.

(கூஎசு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

2-வது சூத்திரம்.

ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
யம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே.

இச்சூத்திரத்தின் பொருள்:—(முன்சூத்திரத்திற் கூறப்பட்ட இரு திணைகளுள்) உயர்திணைச்சொல் ஆணைக்குறிக்குஞ்சொல் லென்றும், பெண்ணைக்குறிக்குஞ்சொல் லென்றும், பல்லோரைக்குறிக்குஞ்சொல் என்றும் மூவகைப்படும் என்பதே. இப்பொருளைச் சேனாவரையர் 'உயர்திணைச்சொல்லுணர்த்தி அதனது பாகுபாடுகூறுகின்றாராகலின், அம்முப்பாற்சொ லுயர்திணைய என்றாராயினும் உயர்திணைச்சொல் மூன்றுபாகுபாடுபடுமென்பது கருத்தாகக்கொள்க' என்னும் வாக்கியத்தால் நன்கு விளக்குகிறார்.

சேனாவரையத்துள்ள 'ஆறும்வேற்றுமை யேற்றுநின்றசொல் பெயராயும் வினைக்குறிப்பாயும்நிற்குமாகலான்' என்பதுபற்றித் தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பில் 'உயர்திணையவென்பது வினைக்குறிப்புமுற்றாங்கால் அகரம் ஆறாம்வேற்றுமையுருபாகாது வினைக்குறிப்புமுற்று விகுதியேயாமென் றறிக' என்று கீழ்க்குறிப்பொன்று உளது; அது பொருத்தமாய்த்தான் தோன்றுகிறது.

'சிவணி' என்பதற்கு உரையாசிரியரும் சேனாவரையரும் 'பொருந்தி' என்று பொருள்கொள்கிறார்கள். நச்சினார்க்கினியரோ அப்பொருளைப் பக்ஷாந்தரமாகக் கூறி, அப்பதத்திற்கு, 'சிவணுகையினாலே' என்று காரண காரியப்பொருள் கூறுகிறார். உயர்திணை எத்தனை வகைப்படும் என்று உணர்த்தும் இச்சூத்திரத்தில் அப்பதத்திற்கு அவ்வாறு பொருள்கொள்வதால் விசேஷப்பயன் ஒன்றும் புலப்படவில்லை.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் 'உரையாசிரியரும் உயர்திணை யெனப்பட்ட பகுப்பை விரிப்புழி இத்துணையல்லது விரிபடாதென்பது ஈண்டுக் கூறியது என்றுரைத்ததூஉமென்க' என்கிறார். இவ்வாக்கியம் இப்பொழுது பதிப்பித்திருக்கும் இளம்பூரணருரையிலேனும், சென்னை ஓரியண்டல் கையெழுத்துப்புத்தகசாலையிலுள்ள கையெழுத்துப் புத்த கத்திலேனும் இச்சூத்திரத்தடியிற் காணப்படவில்லை. வேறு எங்கே யுள்ளதோ தெரியவேண்டும்.

"னஃகானொற்றேயாடூஉவறிசொல்", "ளஃகானொற்றே மகடூஉவறி சொல்", "ரஃகானொற்றும்............பலாறிசொல்லே" என்னும் முச்சூத் திரங்களாலேயே ஆடூவறிசொல் மகடூஉவறிசொல் பலரறிசொல் மூன் றும் அறியப்படுதலால், 'ஆடூஉவறிசொன் மகடூஉவறிசொல் ......... உயர்திணையவ்வே' என்னும் இச்சூத்திரம் வேண்டாம் என்று சிலர்க்குத் தோன்றலாம்; அது ஏற்புடையதன்று. ஏனெனில் 'னஃகானொற்றே யாடூஉவறி சொல்' என்பதற்கு ஆடூவறிசொல் னஃகானொற்றை ஈற்றிற் கொண்டது என்பது பொருள். இவ்வண்ணமே மற்ற இரண்டுசூத்திரங் களுக்கும் பொருள்கொள்ளவேண்டும். ஆதலால் இம்மூன்றுசூத்திரங் களிலும் ஆடூஉவறிசொல், மகடூஉவறிசொல், பலரறிசொல் இவைகளின் இலக்கணஞ் சொல்லப்படுகிறதேயன்றி, இம்மூன்றுசொல்லும் உயர் திணைச்சொல் என்று சொல்லப்படவில்லை. ஆகவே 'ஆடூஉ வறிசொன் ........உயர்திணை யவ்வே' என்னும் இச்சூத்திரம் அவசியமாக இருத்தல் வேண்டும். இக்கருத்தையே சேனாவரையர் 'ஆடூஉவறிசொன் முதலா யினவற்றையுணர்த்தியல்லது, அவற்றதிலக்கணமுணர்த்தலாகாமையின் பாலுணர்த்துமெழுத்து வகுப்பவே அவைதாமும் பெறப்படும்; இச் சூத்திரம் வேண்டாவென்பது கடாவன்மையுணர்க' என்னும் வாக்கியத் தால் நன்கு உணர்த்தினர்.

பாடபேதம்:—சேனாவரையத்தில் 'இக்கருத்தானன்றே ஆசிரியர் அம்முப்பாற்சொல்லும் என இனைத்தெனவறிந்த பொருட்டொகுதிக் குக் கொடுக்கும் உம்மை கொடாராயினும்' என்று இருக்கிறது. 'கோடாராயினும்' என்பதற்குப்பிரதியாக கோடாராயினர் என்று இருக்க லாமோ?

4-வது சூத்திரம்.

பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி
னாண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியுந்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியு
மிவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

இச்சூத்திரத்தின் அவதாரிகை:—மக்களைக்குறிக்குஞ்சொல் உயர்திணையென்றும், அஃது ஆண்பால் பெண்பால் பலர்பால் என்று மூவகைப்படும் என்றும் சொன்னமையால், மக்களைக் குறித்தும், ஆண்பால், பெண்பால், பலர்பால் இவைகளுக்குள் அடங்காத பேடி என்னுஞ் சொல் எப்பாலைக்குறிக்கும் வினையைப்பெற்றுவருமென்றும், மக்களைக் குறிக்காது தெய்வத்தைக்குறிக்குஞ் சொல் எப்பாலைக்குறிக்கும்வினையைப்பெற்றுவருமென்றும் உண்டாம் ஐயம் நீங்குதற்கு இச்சூத்திரம் கூறலாயினர்.

இச்சூத்திரத்தின் பொருள் :— உயர்திணையில் ஆண்மை திரிந்து பெண்மைசுட்டும் பொருளைக்குறிக்குஞ் சொல்லிற்கும், தெய்வத்தைக் குறிக்குஞ் சொல்லிற்கும் தமக்கு உரிய ஈற்றெழுத்து இல்லை; ஆதலால் அவை உயர்திணைக்குரிய பாலாய் வேறுபட்டிசைக்கும்.

இளம்பூரணத்திலும் நச்சினார்க்கினியத்திலும் பெயர்நிலைக்கிளவி என்பதற்குப் பெயர்ப்பொருள் என்று பொருள் கொடுத்திருக்கிறது. அங்ஙனம் ஆயின் அந்தந்தமக்கிலவே என்பது எப்படிப் பெயர்நிலைக் கிளவியோடு இயையும்? பொருளுக்கு அந்தம் ஏது? சொல்லுக்குத் தான் இவ்வெனவறியு மந்தம் உண்டு. ஆதலால் அவர்கள் உரை பொருந்தவில்லை. சேனாவரையரோ, பெயர்நிலைக்கிளவி என்பதற்குப் பெயர்ச்சொல்லென்று பொருள்கொண்டு 'பெண்மைத்தன்மை குறித்த ஆண்மைதிரிந்த பெயர்ச்சொல்லும்' என்று 'பெண்மைசுட்டிய........ பெயர்நிலைக்கிளவி' என்பதற்குப் பொருள் கொடுத்துள்ளார். ஆனால் பெயர்ச்சொல் எப்படிப் பெண்மைத்தன்மையைக் குறிக்கும் என்ற ஆக்ஷேபத்தை மனத்திற்கொண்டு "தன்மைதிரிபெயர் என்றாற் போலச் சொல்லொடு பொருட் கொற்றுமை கருதி ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி என்றார்" என்று சொல்லுகிறார். வேறுவழியில்லாவிடில் இப்படிப் பொருள்கொள்ளவேண்டும். ஆனால் இளம்பூரணத்திலோ

பெயர்நிலைக்கிளவி என்பதற்கு 'பெயர் என்பதனை ஆகுபெயராற் பொருளாக்கி, பொருண்மேல் நிலைபெற்ற கிளவி' என்று பக்ஷாந்தரமாய்ப் பொருள் சொல்லியிருக்கிறது. அப்பொருள் மிகப்பொருந்துவதாகத் தோன்றுகிறது.

இச்சூத்திரத்துக்கு இளம்பூரணத்திற் பேடிவந்தான், பேடிவந்தாள், பேடியர்வந்தார் எனவும், சேனாவரையத்திற் பேடிவந்தாள், பேடர்வந்தார், பேடியர்வந்தார் எனவும், நச்சினார்க்கினியத்திற் பேடிவந்தாள், பேடியர்வந்தார் எனவும் உதாரணங்கள் காணப்படுகின்றன. இளம்பூரணத்திற் பேடிவந்தான் என்று காட்டியதற்குக்காரணந் தெரியவில்லை. 'ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி, ஆண்மை யறிசொற் காகிடனின்றே' எனும் 12-வது சூத்திரத்தில், பேடி வந்தான் என்று சொல்லுவது தவறு என்றே சொல்லியிருக்கிறது. அங்கும் 'ஆகிடனின்றே' என்பதனாற் சிறுபான்மை 'பேடிவந்தான்' என ஆண்பாற்கும் ஏற்கும் என்று உரையாசிரியர் சொல்வதற்குக் காரணம் தெரியவில்லை. சேனாவரையரும் 'பெண்மைசுட்டிய எனவே பெண்மைசுட்டாப் பேடென்பதும் ஒழிக்கப்பட்டதாம்' என்று சொல்லிவிட்டு 'பேடர்' என்பதை உதாரணத்திற் கொடுத்தது பொருந்தவில்லை. 'பேடியர், பேடிமார், பேடிகள் என்பனவும் அடங்குதற்கு' என்று அவர் பின் சொல்வதைப்பார்த்தால், 'பேடர்' என்பது அவர் கூற்றன்றி எழுதினவர் தவற்றால் வந்திருக்குமோ என்று ஐயமுண்டாகின்றது. ஆனால், 'பெண்மைதிரிதலுமுண்டேனும் ஆண்மைதிரிதல் பெரும்பான்மையாகலான் ஆண்மை திரிந்த என்றார்' என்று சொல்லுமிடத்து உபலக்ஷணத்தாற் பேடன் என்பதற்குப் பலர்பாலாகப் 'பேடர்' என்பது உதாரணமாகக் கொள்ளலாம் என்று அவ்விடத்துக்காட்டியிருந்தாற் பொருந்தும். ஆகையால் நச்சினார்க்கினியர் உதாரணமே மிகமேலானது.

சூத்திரத்திற் பேடி என்று சொல்லாமல், 'பெண்மைசுட்டிய வுயர்திணைமருங்கின், ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி' என்று சொன்ன

தற்குப் பயன் 'பேடியர்வந்தார்' என்பதுமுதலிய பலர்பாற்சொற் களையும் தழுவுவதேயாம். இதைச் சேனாவரையர் 'பேடியர், பேடிமார், பேடிகள் என்பனவும் அடங்குதற்குப் பேடியென்னும் பெயர் நிலைக் கிளவியென்னாது பெண்மைசுட்டிய ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி என்றார்' என்னும் வாக்கியத்தாற் காட்டுகிறார். 'பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த' என்பது உபலக்ஷணத்தால் 'பெண்மை திரிந்த ஆண்மை சுட்டிய' என்பதையுங் குறிப்பது என்பதைச் சேனாவரையர் 'பெண்மைதிரிதலுமுண்டேனும் ஆண்மைதிரிதல் பெரும்பான்மையாக லான் ஆண்மைதிரிந்த என்றார்' என்பதால் குறித்துள்ளார்.

பாடபேதம்:—தாமோதரம்பிள்ளையவர்கள் பதிப்பித்துள்ள சேனா வரையத்தில் 'தமக்கெனவீறுடைய ஆடூஉவறிசொன் முதலாயினவற்றிற் குரிய ஈற்றானும் இசைக்குங்கொல்' என்றவிடத்து 'தமக்கென வீறுடைய' என்பது பொருந்தவில்லை. அதற்குப் பிரதியாகச் சைவ சித்தாந்தக்கழகப்பதிப்பில், 'தமக்கெனவீறுடையவாய்' 'தமக்குரிய வீற்றானிசைப்பதன்றியும்' என்று இரண்டு பாடபேதங்கள் உள்ளன. அவையே நன்கு பொருந்துகின்றன.

சேனாவரையத்தில், 'சுட்டியவென்பது செய்யியவென்னும் வினை யெச்சமென்றும், ஆண்மைதிரிதல் சொற்கின்மையிற் பெயர்நிலைக்கிளவி என்பது ஆகுபெயராய்ப் பொருண்மேனின்றதென்றும் உரையாசிரியர் கூறினாராலெனின்' என்று கூறப்படும் வாக்கியம் இப்பொழுது பதிப்பித் திருக்கும் இளம்பூரணத்திற் காணோம். ஆனால் இச்சூத்திரத்தின் பொருள் சொல்லுமிடத்துப் பெயர்நிலைக்கிளவி என்பதற்குப் பெயர்ப் பொருள் என்று பொருள் கொண்டிருக்கிறார். சுட்டிய என்பது வினை யெச்சமென்று எங்குங் காணப்பட்டிலது.

5-வது சூத்திரம். னஃகா னெற்றே யாடூஉ வறிசொல்.

இச்சூத்திரத்தின்பொருள்:— ஆடூஉவறிசொல் னஃகானொற்றை ஈற்றிற் கொள்வது.

இளம்பூரணம். ஏகாரம் பிரிநிலை.

சேனாவரையம். ஏகாரம் அசைநிலை.

நச்சினார்க்கினியம். ஏகாரந் தேற்றேகாரம்.

னஃகான்முதலிய ஈற்றெழுத்துக்களைப்பற்றி இச்சூத்திரத்துக்கு முன்னமே சொல்லிப் பின் இச்சூத்திரம் சொல்லியிருந்தால் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் ஏகாரத்துக்குக் கொள்ளும் பொருள் பொருந்தும். ஆனால் இச்சூத்திரத்தில் ஆடூஉவறிசொல்லின் இலக்கணமே விதிக்கப்படுவதனால், சேனாவரையர்சொல்லும் பொருளே பொருந்தும். மேலும், 'நோக்தோன்றும் பலாறிசொல்லே' என்னுமிடத்து ஏகாரம் ஈற்றசை என்கிறார் உரையாசிரியர். ஆதலால் இடையில் வந்தால் ஈற்றசையென்று கொள்ளக்கூடாதென்பது அவர்கருத்துப் போலும்.

(தொடரும்)

---

# பிழைதிருத்தம்.

(o)

சென்ற புரட்டாசிச் செந்தமிழ்ப்பகுதியிலே ௩௭௫-ஆம் பக்கம் ௨௭-ஆம் வரியில் ஸூஷயீத என்பதற்குப் பிரதியாக ஸூவஹெத என்று படிக்கவும்.

ஸ்ரீ:

# சித்ராரூட நொண்டிச்சிந்து.

[சித்தராரூட நொண்டிச்சிந்து என்னும் பெயருடைய விஷவைத்திய நூலொன்று உண்டு. அதனை யியற்றியவர்பெயர் முதலிய விவரமொன்றும் விளங்கவில்லை. அது கற்றோரும் மற்றோரும் எளிதிற் பொருளறிதற்குரிய இனிய செவ்விய நடையுடையது. விஷஜந்துக்களின் வரலாறும் விஷந்தீர்த்தற்குரிய பல அரிய சிகிச்சைமுறைகளும் முதலியவற்றை அறிவுறுப்பது. அதிலிருந்து சில கண்ணிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இந்நூல் ஒருமுறை பதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவரினும் இப்பொழுது பிரதிகள் கிடைப்பது அரிதாயிருத்தலால், இரண்டாமுறை திருத்தமாகப்பதிப்பித்து வெளியிடுமாறு பண்டிதர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வ.]

[காப்பு—விருத்தம்]

அத்திமா முகவன் செய்ய வடியிணைக் கமலம் போற்றிச்
சித்தரா ரூடந் தன்னிற் [1]செப்பிய பொருளை யாய்ந்து
சுத்தமா யெவர்க்குந் தோன்றச் சுருக்கமாய் நொண்டிச் சிந்தாய்
வித்தக ரருளி னாலே தமியனும் விளம்ப லுற்றேன்.

நூல்.

க. திருமரு தூர்வளரும்— நாகலிங்கர்—
சீர்பாத கமலமென் சிரத்தில்வைத்து
வருசித்த ராரூடப்— பொருளினை—
வகுத்துச்சொல் கிறேனிந்த மகிதலத்திற்

உ. புண்டரீ கத்திலுறைவோன்— படைத்ததிற்—
பொல்லாத விடஞ்சேர்ந்த தெல்லாமுமே
விண்டுரைக்கக் கேளுமினி— நல்லபாம்பு—
விரியன் வழலைகொம் பேறிமூக்கன்

பிரதிபேதம்:— [1]செப்பியபொருளையோர்ந்து.

௩. சாணக மூக்கன்புடையன்— மண்டலி—
சவடி மயக்கரா மண்ணுளிசாரை
வாணலை வாட்டுஞ்செய்யான்— இருதலை—
மணியன் சிலந்திபுலி முகப்பூச்சி

௪. தேள்புள்ளி வண்டு [1]பூரம்— பச்சோந்தி—
செவ்வட்டை பேய்நரிநாய் [2]சோரவேபள்ளி
[3]வாளம்பல்லுப் பூனைபுலி— பிலவங்கம்—
வனத்துத் தவளையட்டை வாசிமுதலை

௫. அரணைநட் டுவக்காலி— முதலிவை—
யல்லா விடசெந்துவு மநேகமுண்டாம்
உரகத்தின் பெயர்நிற மூஞ்—சாதியும்—
ஊணும் மணமுமவை யுறையிடமும்

௬. படமெடுத் தாடுங்குறியும்— முட்டையிட்டுப்—
பருவ மறிந்துபொரித் தூரும்பரிசும்
விடமுறுந் தந்தக்குறியுங்— கடித்திடும்—
விதமுங் கடித்தகடி மீளாததும்

௭. காலக்கடி யடக்கக்குறி— லக்கக்குறி—
கருதிய தூதரிலக் கணக்குறியுஞ்
சீலமணி மந்திரத்தாற்— கெருட—
தியானத்தால் மருந்தினுற் றீர்க்குஞ்செயலுங்

௮. குருமல ரடிவணங்கி— வகையாகக்—
கூறுகி றேனிந்தக் குவலயத்தில்

[பாம்பின் பிறப்பு]

மருமலர்ப் பொகுட்டுறைவோன்— பயந்தருண்—
மகவென வந்துதித்த மாதவத்தோன்

௯. காசிபன் மனைவியரின்— மிக்கான—
கத்துரு வயிற்றுதித்த கட்செவிகளைப்

பி-ம். [1]பூரான், [2]சிராவெலி, [3]வாள்பல்லுப்.

[மாநாகத்தின்பேர், சாதிவகை.]

பேசிடிற்போனந்தன்— வாசுகி—
பிலத்துறை தக்கன்கார்க் கோடகன்பற்பன்

க0. மாபற்பன் சங்கபாலன்— குளிகனிம்—
மாநாக ரெட்டுப்பே ரவர்களிலே

தீயகட் செவியநந்தன்— குளிகனுஞ்—
செகத்தில்வே தியரென வகுத்தனரே

கக. வாசுகி சங்கபாலன்— இவர்களை—
மன்னவ ராமென்று சொன்னார்முன்னோர்

தேசுறு தக்கன்மகா—பற்பனிவர்—
தெளிந்து வணிகரென மொழிந்தனரே

கஉ. சூத்திரர் கார்க்கோடகன்— பற்பனென்றுஞ்—
சொன்னார்க ளிவரின்முன் சொன்னபாம்பின்

மூத்திடு மாநாகம்— பின்னாக—
மொழிந்தபெண் பாம்பென்று தெளிந்தனரே.

[இரையெடுக்கும் நாள்]

கங. ஆதித்த வாரமநந்தன்— வாசுகி—
யடுத்ததிங் கட்கிழமைக் கிரையெடுக்கும்

போதுற்ற செவ்வாய்தக்கன்— கார்க்கோடகன்—
புதன்கிழ மையன்றைக் கிரையெடுக்கும்

கச. விடங்கொண்ட துளைபெயிற்றுப்— பற்பன்—
வியாழக் கிழமைதனி லிரையெடுக்கும்

படர்ந்துசென் றிரையெடுக்கும்— தேடிமா—
பற்பரா சன்வெள்ளிக் கிழமைதனிற்

கரு. கூறுசனிக் கிழமைபகல்— சங்கபாலன்—
குளிக னிராக்கால மிரையெடுக்கும்

[இரைவகை]

பூநவ மறைந்தபார்ப்பான்— வாயுவும்—
பூமண மும்இரண்டும் புசித்திருக்கும்

௧௬. அரச னருகங்கிழங்கும்– வண்டுமெடுத்–
தருந்தி வளைதனிற்சென் றடைந்திடுமே
இரைதேடிச் சென்றுவணிகன்– ஓந்தியு–
மெலியும் பிடித்தருந்திப் பசிதீரும்

௧௭. சூத்திரன் மீன்றவளை– தண்ணீர்த்–
துறையினிற் சென்றருந்து முறையிதுவே
சாத்திரஞ் சொன்னபடியே– நாலுவகைச்
சாதி யிருக்குமிடந் தனைக்கேளும்

[இருப்பிடமும் ஆடுந்தறியும்]

௧௮. வேதியன் கோவிலிலே– மரத்தினில்–
வேந்தன் மனையிற்செட்டி சூத்திரன்புற்றில்
நீதியாய் வாழ்ந்திருக்கு– நால்வரும்–
நின்றாடுங் குறிதனை நிகழ்த்துகிறேன்

௧௯. அண்ணாந்து பார்த்தாடும்– வேதிய–
னரசன்செவ் வேபார்த் தாடிநிற்கும்
கண்ணாலே தெற்கும்வடக்கும்– பார்த்துத்திசை–
கட்டிக்கொண்டு நின்றாடுஞ் செட்டிப்பாம்பு

௨0. வெள்ளாளன பூமிதனையே– பார்த்தாடும்–
வேத முறைப்படிதப் பாதிதுவே
முள்ளெயிற்றுப் பாம்பின்படம்– தனில்வைத்த–
முத்திரையைச் சொல்லுகிறேன் சித்திரமதாய்ப்

[படத்தில் முத்திரை]

௨௧. பார்ப்பான் படத்திற்சங்கு– மன்னவன்–
படத்தினிற் சக்கரம் பதிந்திருக்கும்
காப்பான வில்வணிகன்– படத்தினிற்–
காராளன் படத்திற்புள் ளடியிருக்கும்

[நிறம்]

௨௨. பூசுர னரத்தநிறம்– புரவலன்–
பொன்னிறஞ் செட்டிமதி யின்னிறமாம்
மாசிலாச் சூத்திரனிறம்– கண்டிட்டு–
மையினிற மாமிது மெய்யாகுமே

ஸ்ரீ:

# குருபரம்பரை.

## இரண்டாங்காண்டம்.

[வைஷ்ணவ ஆழ்வார்கள் ஆசாரியர்கள் வைபவங்களை இரண்டு காண்டங்களிற் சற்றேறத்தாழ ௬000 செய்யுளாற் பொருள் இனிது விளங்குமாறு விரித்துக்கூறும் குருபரம்பரை என்ற பெயருடைய தமிழ்நூல் ஒன்று உண்டு. இதனை இயற்றியவர் பெயர் முதலிய விவரம் நன்குவிளங்கவில்லை. இந்நூலிற் சில சிறுபகுதிகள் முன் சிலரால் அச்சிடப்பட்டன. ஏனையவை இதுகாறும் அச்சிடப்படவில்லை. சிதன்முதலியவற்றான் இந்நூல் இறந்தொழியாது காத்தற்பொருட்டு, ஆளவந்தார்வைபவம், எம்பெருமானார்வைபவம் எனும் இரண்டு பகுதிகளால் ஆசாரியர்களின்வைபவங்கூறுவதாகிய இந்நூலின் இரண்டாங்காண்டம் இத்தமிழ்ச்சங்கக் கையெழுத்துப்பிரதியிலுள்ளபடி முதலிற் செந்தமிழில் வெளியிடப்படுகிறது. (முதற்காண்டம் பின் வெளியிடப்படும்). உதவிப்பத்திராதிபர்.]

## ஆளவந்தார்வைபவம்.

ஆதியுமநாதியும்படைத்ததேதகை
நீதியைநிலைபெறநிறுத்ததேதகைப்
பேதியாச்செண்பகமாறன்பெற்றநற்
சோதியேதனையாந்தொழுதல்செய்குவாம். (௧)

இந்தவகையாழ்வார்களாண்டாளிருநிலத்தில்
வந்துபிறந்துமறையாயினவனைத்துஞ்
செந்தமிழாற்பாடிச்செகத்திற்பிறவிநோய்ப்
பந்தமறுத்துப்பலகாலஞ்சென்றதற்பின். (௨)

ஆசாரியர்களவதரித்துமுன்புரைத்த
தேசார்தமிழாற்செகமுய்யச்செய்தமையும்
மாசாம்பிறவிமறிகடலுட்புக்கெம்மைக்
கூசாதெடுத்தகுருவருளாற்கூறுவாம். (௩)

அருடருஞ்சீர்த்தமிழ்வேதமெனத்தோன்றியகலிடத்தி
லிருள்முழுதுந்துரந்தோட்டியெழுந்திலகுமர்தவனை
மருளுறும்பொய்க்கலிமேகம்வந்து மறைத்திடவையந்
தெருளுறுசீர்நெறிபிழைத்து த்தீநெறிக்கட்செலுநாளில். (ச)

நீதிவளர்மகிழ்மாறன்றிருவருளால்நீணிலத்தில்
வேதியர்கள்பலர்வாழும்வீரநாராயணத்திற்
சோதிமறையவர்மரபிற்சொட்டைக்குலத்தவரி
லோதியசீரீச்சுரபட்டாழ்வார்வந்துற்பவித்தார். (ரு)

சீதமிகுந்துழாய்முடியான்றிருவருளாலுலகுய்ய
வேதமருந்தமிழ்செய்தான்மெய்விளங்கப்பொய்கலங்கப்
போதமிகுமீச்சுரபட்டாழ்வார்க்கிப்பூதலத்தில்
நாதமுனியெனவொருவன்பிறந்தனனன்மறைவாழ. (சா)

ஆங்கவன்பிறந்திம்மண்ணிலாருயிருய்யச்செய்த
வோங்குசீருதவிதன்னையுற்றெனவுரைக்கலாமே
தாங்குநற்குணத்தினற்கோர்தாசனனுதலாலப்
பாங்கினல்நாரணையன்பணித்தவாபகாலுற்றேன். (எ)

மின்னனையதிருவருளும்வீரநாராயணத்தில்
மன்னனார்திருவருளுமாசிலாப்பாலகனுக்
கின்னமுதமாகவிருமூன்றுதிங்கடனி
லன்னப்பிராசனஞ்செய்தப்பருவஞ்சென்றதற்பின். (அ)

இலங்குநான்மறையில்முன்னமிசைத்தவாசவுளஞ்செய்து
வலம்புரிமுந்நூல்சாத்திமாசறுமறைகளோதி
யலங்கலக்தாரினனுமாசறுமாபிலாங்கோர்
சிலம்பணிபதத்தினளைத்திருக்கலியாணஞ்செய்தான். (கூ)

அந்தவொண்டொடிபால்நாதமுனிகளுக்கமரர்போற்ற
வந்தொருபுதல்வன்றேன்றமற்றவன்றனக்குநாம
மிந்தமாநிலத்தோரேத்துமீச்சுரமுனியென்றிட்டு
முந்தைநான்மறையிற்கன்மமுற்றுமம்முறையாற்செய்தே. (க0)

வீரநாராயணத்தில்மன்னனார்விரைத்தாளேத்திச்
சீருறுபிதாவுந்தாமுஞ்சிறுவனுஞ்சிலநாளந்தக்
கார்முகில்வண்ணற்கேற்றுங்கயிங்கரியங்கள்செய்தாங்
கார்வமோடிருந்தார்நாதமுனிகள்மற்றந்நாடன்னில். (கக)

திருமகள்கொழுநன் முன்னந்திருவவதாரஞ்செய்து
மருவியவிடங்கடோறும்வணங்கிடவேண்டுமென்று
பெருகியகாதலோடும்பிள்ளையும்பிதாவுந்தாமு
மொருபகல்மன்னனுரைத்தொழுதிவையுரைக்கலுற்றார். (௧௨)

நாராயணனேநீமுன்னம்ஞாலமுய்யவவதரித்த
சீராரயோத்திவடமதுரைதிருவாய்ப்பாடிதுடக்கமா
மோரார்பதிகள்மழைக்கெடுத்தவெழிலார்கோவத்தனஞ்சிறந்த
வேரார்துதலார்கண்டிறைஞ்சும்விருந்தாவனமற்றுளதலங்கள். (௧௩)

பண்டுநீபுக்கமர்ந்ததலம்பாதச்சுவடென்றனைத்தினையுங்
கண்டுகண்ணுற்கைகூப்பிக்கருத்தாலிறைஞ்சித்திரும்பிடுவா
னுண்டுவிருப்பம்விடையருள்கவுலகமுண்டாயெனநின்றார்
கொண்டல்வண்ணனவணஞ்செய்திடுகவென்னவிடைகொடுத்தான். (௧௪)

மன்னனார்விடைகொடுப்பமற்றவரைவலஞ்செய்து
முன்னைநான்மறைகாணுமுளரிமலரடிபணிந்தங்
கன்னநாகிளப்பெடைகட்.........................
மின்னனார்நடைபயிற்றும்வீரநாராயணத்தை. (௧௫)

விட்டெழுந்துமூவர்களும்வேதாந்தத்தினிதமரு
மெட்டெழுத்தேதுணையாகவேழுலகுந்தொழுதேத்து
மட்டவிழ்பூம்பொழில்புடைசூழயோத்திநகர்வடமதுரை
சிட்டர்தொழுமாய்ப்பாடிசிவதரிகாச்சிரமம். (௧௬)

துடக்கமானதிருப்பதிகள்சுருதிகூறுநாற்றிசையில்
வடக்கிலுள்ளதிருப்பதிகளெல்லாநோக்கிவணங்கியபின்
குடக்குங்குணக்குஞ்சென்றிறைஞ்சிக்கோலமிக்கபார்மகள்மேற்
கிடக்கும்யமுனாதீரத்திற்கிளருங்கோவத்தனபுரத்தில். (௧௭)

மன்னும்யமுனைத்துறைவரைவணங்கியிணங்குமூவர்களும்
பின்னமின்றி................பிச்சைபுக்காங்கப்பதியின்
மின்னுநேமிவலத்தாற்குவேண்டும்பணிசெய்தாண்டுபல
வின்னல்நீங்கியங்குள்ளார்யாருமிறைஞ்சவினிதமர்ந்தார். (௧௮)

மாசில்லாவீரநாராயணத்தின்மன்னிவள
ரீசனார்மற்றவர்கள்சொப்பனத்திலெழுந்தருளி
நேசமிகுமுள்ளத்தீர்நீங்கணுமினிதமருந்
தேசுறுஞ்சீர்வீரநாராயணத்திற்செறிமினென. (௧௯)

செப்பினர்மன்னனார்செழுந்தவஞ்சேர்மூவர்களு
மப்பொழுதேயெழுந்திருந்து கனவிலுறுமதிசயத்தை
யொப்பரியார்கொண்டாடியுருகுமருங்காதலொடுந்
தப்பற முன்னப்பதியிற்றலைவரைச்சென் றுறவணங்கி. (உo)

வீரநாராயணத்தில்விரைவினீர்வருமினெனக்
கார்வண்ணமன்னனார்களுக்காட்டினரென்ன
நார்நாதன்னடமின்விடைதந்தோநாமுமென
வாராசிவ்வழியாய்வந்துசிங்காத்திரிவணங்கி. (உக)

ஆங்குநின் றுபலபலவாந்திருப்பதிகளமர்ந்திறைஞ்சி
யோங்குதிருவேங்கடப்பொற்குன்றத்தையதிலுறையும்
பூங்கமலக்கண்ணனையாழ்வாரைப்போதத்தார்
பாங்குறுசீர்த்திருமகளைமுன்னிட்டுப்பணிந்தேத்தி. (உஉ)

பத்தியின்கடலாமூவருமூவாப்பரன்வளர் திருமலைமீதே
நித்தியவாசம்பண்ணுவோமென்னநினைந்தனர்மன்னனார்நம்மை
யித்தலத்திருக்கின்முனிவரென் றஞ்சியெழிறிகழ்வேங்கடப்பொருப்பைச்
சித்தமோடழுத்தியாங்குநின்றேகித்திருவளர்காஞ்சிமாநகரில். (உங)

அருளாளர்திருவடியையகங்குழைந்துதொழுதேத்தித்
தெருளார்ந்தசிந்தையொடுந்திருவயிந்திரபுரத்திற்
பொருளாரைப்புகுந்திறைஞ்சியாங்குநின் றும்போந்தருளி
வெருளாநோய்வெருளவுயர்வீரநாராயணத்தில். (உச)

வந்தமர்ந்து மன்னனார்மலர்க்கமலத்திருத்தாள்கள்
சிந்தையுறப்பணிந்தேத்தித்திருவரங்கத்தினிதமரு
முந்தைமறைதொழுமுதலைமூவருஞ்சென் றடிவணங்கிப்
பந்தமறவீரநாராயணத்திற்பண்டுபோல். (உரு)

சென்றமர்ந்து மன்னனார்திருவுளத்தையுவப்பிக்கு
நன்றிசெறிகயிங்கரியநாடோறுநயந்தியற்றி
மன்றல்கமழ்பூமாலைப்பணிபற்றிமதிமிக்கா
ரொன்றியசீரன்பினராயோதவண்ணருடன்வாழ்ந்தார். (உசு)

அந்நாளில்வீரநாராயணத்திலமர்ந்தருளிப்
பொன்னாழிசங்கேந்தும்பூவைப்பூவண்ணனு
ரென்னாவியிவர்மூவரெனப்பேணிவருமினெனச்
சொன்னார்மற்றுங்குறையும்பாகவதர்சொப்பனத்தில். (உஎ)

அண்ணலிக்கனவுகாட்டவாங்குறையனைத்துக்கொத்து
முண்ணெகுகருணைமிக்கவுத்தமர்நாளும்வைக
விண்ணமர்மாடகூடமாளிகைகட்டிநல்கி
யெண்ணரும்புகழினாநக்கெல்லையில்வளங்களீந்தே. (௨௯)

திருவுளம்மகிழப்பண்ணிச்சிந்தையால்வணங்கியேத்தி
மருவினாரங்குளார்கள்மற்றிவர்மூவர்தாமும்
கருமுகில்வண்ணற்கானகயிங்கரியங்கள்பண்ணித்
தருமசாத்திரங்களோதிச்சார்ந்தவர்க்கோதுவித்தே. (௨௯)

அத்திருப்பதியில்வாழ்ந்தாரவ்வணம்வாழுநாளிற்
பத்தர்கட்கினியசோதிப்பங்கயக்கண்ணனென்று
மித்தலத்துள்ளலீலாவிபூதிசளீறிலின்ப
முத்திபையடைந்துபொன்றாமுத்தாயிருக்கும்வண்ணம். (௩௦)

புரையறவவைகணம்மைப்போற்றிடுமுபாயமெண்ணிக்
கரசரணாதிபாயகரணங்கள்கொடுத்துமெய்ம்மை
யுரைசெயும்வேதமாதிநூல்களையுலகிவிட்டுந்
தரைமிசைப்பிறந்துநாமேதத்துவமுபதேசித்தும். (௩௧)

ஒன்றினுமுய்யும்வண்ணங்கண்டிலமுலகினுள்ளோ
ரன்றதற்பின்புநாநம்மாழ்வார்கள்பாடலாலே
நன்றிகொன்றுழலும்வஞ்சநானிலத்துயிர்களெல்லாம்
பொன்றவில்முத்தரோடும்பொருந்திடும்வண்ணமெண்ணி. (௩௨)

அறைந்தஞானச்செழுந்தமிழ்களல்லலுலகிற்கலியிருளால்
மறைந்துகிடப்பதடுக்கன்றுமற்றிந்நாதமுனிதனக்கு
நிறைந்தஞானமளித்துவசிநீர்சூழுலகமுய்ந்திடமுன்
பிறந்ததமிழைவெளியாக்கவேண்டுமென்னப்பிரமர்பிரான். (௩௩)

எண்ணிநாதமுனிதனக்கிங்கேழுலகுமப்பாலாம்
விண்ணினுள்ளபொருளனைத்தும்விளக்கிவெளியாய்மெய்ஞ்ஞானக்
கண்ணிற்றோன்றவநள்செய்தக்கண்ணைக்கொடுத்தான்கார்வண்ணன்
மண்ணிற்பிறந்தார்நாதமுனிக்கிணையார்தவத்தின்வாய்த்தாரே. (௩௪)

அந்நாளில்நாதமுனிக்கருள்செய்தாங்கினிதமரு
மன்னார்பூங்கழறெழுவான்மலர்க்காவில்மதுவருந்தித்
தென்னாவென்றளிமுரலுந்திருக்குடந்தைப்பாகவதர்
பொன்னாமுப்புரிநூலோரிருவருடன்புக்கார். (௩௫)

சென்றவர்கள்மன்னஞர்திருவடியில்நாதமுனி
யென்றுரைக்குமெய்ஞ்ஞானிகேட்டிருப்பவெழில்மாற
னன்றுரைத்தவாயிரத்தாராவமுதமெனும்பத்தை
நின்றுரைத்தார்மற்றவனுமவைகேட்டுநெக்குருகி. (௩௬)

ஊற்றுமணற்கேணியினிலொசிந்தொசிந்துகரைந்திரங்கி
யேற்றமிகுமாயிரத்துளிப்பத்துமென்றிறுதிச்
சாற்றுப்பாட்டிருந்தபடிகண்டிந்தத்தமிழ்வேதந்
தோற்றமிகுமாயிரத்துளோர்பாட்டுஞ்சோராமல். (௩௭)

உங்களுக்குப்போமேனீருரைமினெனநாதமுனி
யங்கவர்கள்முகநோக்கியருள்செய்பவாங்கவரு
மெங்களுக்கேயாயிரத்துளிப்பத்தும்வரும்மற்றிப்
பொங்குகடலுலகத்தார்க்கிவ்வளவும்போகாதால். (௩௮)

என்றுரைத்தாரதுகேட்டநாதமுனியீடுபட்டங்
கன்றவர்கள்கட்டுரைத்தவருந்தமிழிலன்பிருத்திச்
சென்றுதிருவரங்கமுதற்றிருப்பதிகடொறும்புக்காங்
கின்றிவ்வாலாயிரமுண்டெனவறிந்ததமிழ்வேதம். (௩௯)

வல்லவர்களல்லாதேமற்றதற்குச்சீகோசந்
தொல்லுலகிலுண்டென்னிற்காண்டுமெனச்சுருதிதொழும்
மல்லமர்திண்புயப்புயலாமன்னஞர்கழல்தொழுது
செல்லமரும்பொழில்புடைசூழ்திருவரங்கநகர்புக்கார். (௪0)

[தொடரும்.]

---

# பிழை திருத்தம்.

ஆவணிச்செந்தமிழில் ௩௩௮-ம் பக்கம் ௧௩-ம் வரியிற் சையமேற் றகைந்தே என்றிருப்பதைச் சையெனத்தகைந்தே என்றும், இச்செந்தமிழ்ப்பகுதியின் ௩௬௬ ஆம்பக்கம் ௫ ஆம் வரியில் எல்லைச்சுவற்றை என்றிருப்பதை எல்லைச்சுவரை என்றும் திருத்திக் கொள்க.

---